
# சோதிடமலர்

**SOTHIDA MALAR**





உள்ளே......

சைவ விரதங்களும் விழாக்களும்
சந்தேக நிவிர்த்தி
எண்சோதிட உண்மைகள்
அதிஷ்ட எண்ஞானம்
வாசகர் கருத்து

உ

# சோதிட மலர்

SOTHIDA MALAR

மலர் 11 ❋ இதழ் 12

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

விபவ ௵ பங்குனி ௴
( 14 - 3 - 89 )

𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍 𑌕𑍃𑌪𑌾𑌜𑌲𑌨𑌿𑌧𑍇 𑌕𑍃𑌤𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞 𑌶𑌕𑍍𑌤 𑌨𑌤𑌵𑌤𑍍𑌸𑌲 𑌸𑌰𑍍𑌵𑌶𑍇𑌷𑌿𑌨𑍍
𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌸𑍁𑌶𑍀𑌲 𑌸𑍁𑌲𑌭𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌪𑌾𑌰𑌿𑌜𑌾𑌤
𑌶𑍍𑌰𑍀 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶 𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂
𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

* * *

பாதியில் உமையாள் தன்னை பாகமா வைத்த பண்பன்
வேதியன் என்று சொல்லி விண்ணவர் விரும்பி [ஏத்தச்
சாதியாஞ் சதுர்முகனுஞ் சக்கரத்தானுங் காணச்
சோதியாம் துருத்தி யானைத் தொண்டனேன் கண்ட [வாறே.

* * *

○ எமது விருப்பங்கள் உடனுக்குடன் நிறைவேறி விடுவதால் அவை அடங்கி விடுவதில்லை -நெய்சொரிந்த அக்கினிபோல அவை மென்மேலும் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. எனவே கூடிய அளவுக்கு ஆசைகளில் மனம் வைத்தலாகாது.

○ பொறி புலன்களைக் கட்டுப்படுத்தி மனதை வசப்படுத்தி நிறுத்தி உடம்பை வருத்தாமல் நல்வழியில் வாழ்வதே வாழ்க்கையாகும். இதனால் இம்மை மறுமைப் பயன்கள் இன்பகரமானதாக அமைகின்றன.

○ நல்லோருடன் பழகும் விருப்பமும், பிறர் நற்குணங்களைப் புகழ்தலும், புகழ்ச்சியிற் திருப்தியும், பெரியோரிடம் பணிவுடைமையும், கல்வியில் ஊக்கமும், உலக அபவாதத்திற்குப்பயமும், தன்னையடக்குந்திறனும், இறைவனிடம் பக்தியும் ஆகிய இக்குணங்களே மனிதனைத் தேவனாக்குகின்றன.

○ நற்பண்புள்ள மைந்தனையும் கணவனின் நன்மையையே விரும்பும் மனைவியையும் இன்பதுன்பங்களில் பங்குகொள்ளும் நண்பனையும் எவனொருவன் பெறுகிறானோ அவனே பாக்கியசாலி.

## இம்மாத விசேடங்கள்

### பங்குனி உத்தர நன்னாள்

பாதியில் உமையாள் தன்னைப் பாகமாய் வைத்திலங்கும் வேதியனும் இறைவனை கல்யாணசுந்தரமூர்த்தியாக வழிபடுவதற்குச்சிறந்த தினமாகும். இறைவன் மதுரையில் பார்வதி தேவியைத் திருமணம் செய்ததால் கலியாணசுந்தரவிரதமென்றும், திருமணக்கோலத்துடன் காட்சிதருந் தினமாதலின் திருமணவிரதமென்றும் வழங்கப்படுகிறது.

இவ்விரதகாரர் திருமணக் கோலத்துடன் சேர்ந்த இறைவனின் உருவத்தைப் பொன் முதலிய உலோகங்களாற் செய்வித்து புனிதமானஓரிடத்தில் வைத்து அவ்வுருவத்திற்கு அபிடேக ஆராதனைகள் செய்து சந்தனக்குழம்பு சாத்தி அர்ச்சித்து வழிபட வேண்டும். பின் மறுநாட்காலை அர்மானுஷ்டானங்கள் முடித்து சிறந்த பிராமணத்தம்பதியரை வரவழைத்து சுந்தரமூர்த்தியாக அவர்களை பாவனைசெய்துகொண்டு ஆராதனைகள்புரிந்து அமுதுசெய்வித்து அவ்வுருவத்தையும் ஏனையதானப் பொருட்களையும் கொடுத்து வணங்கி ஆசிபெற்று ஏனையசிவனடியாருடன் பாரணை(போஜனம்) செய்தல் வேண்டும். இவ்விரதத்தை முறையாக அனுட்டித்து, திருமகள் திருமாலின் மார்பில் வீற்றிருக்குந்தன்மையும், இந்திரன் இந்திராணியை மனைவியாகப் பெற்றமையும், பிரம்மதேவன் சரஸ்வதி தன்நாவில் வைத்திருக்குந் தவப்பேறையும், சந்திரன், அசுவினி முதலிய நட்சத்திர கன்னிகைகளை மனைவியாகப் பெற்றுள்ளமையும் இவ்விரதச் சிறப்பிற்கு புராண வரலாற்றுச்சான்றுகளாகும். மேலும் இவ்விரதமேன்மையால் கன்னியர் தமக்கிசைந்த காளையர்களையும் இளைஞர் தமக்கேற்ற கன்னியர்களையும் பெறும் பேருகும் என சான்றுகள் கூறுகின்றன.

# விபவ வருஷ பங்குனி மாத கிரக நிரயனஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5-30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனும்சம் 23 பா 42கலை 25விகலை)

| தேதி மார்ச் | பங் | நாக்ஷத்ர நேர பகல் 12-00 ம நி. செ | சூரியன் ⊙ ரா பா க | சந்திரன் ☽ ரா பா க | செவ்வாய் ♂ ரா பா க | புதன் ☿ ரா பா க | குரு ♃ ரா பா க | சுக்கிரன் ♀ ரா பா க | சனி ♄ ரா பா க | ராகு ☊ ரா பா க | யுரேனஸ் ♅ ரா பா க | நெப்டி ♆ ரா பா க |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | 23 27 25 | 10 29 41 | 1 24 26 | 1 7 54 | 10 11 25 | 1 6 43 | 10 24 8 | 8 18 56 | 10 10 13 | 8 11 20 | 8 18 25 |
| 15 | 2 | 23 31 22 | 11 0 41 | 2 7 41 | 8 30 | 13 3 | 6 52 | 25 22 | 19 00 | 10 10 | 11 21 | 18 26 |
| 16 | 3 | 23 35 18 | 1 40 | 2 20 32 | 9 7 | 14 41 | 7 1 | 26 37 | 19 4 | 10 7 | 11 22 | 18 27 |
| 17 | 4 | 23 39 15 | 2 40 | 3 3 5 | 9 43 | 16 21 | 7 11 | 27 52 | 19 7 | 10 4 | 11 23 | 18 28 |
| 18 | 5 | 23 43 12 | 3 40 | 3 15 23 | 10 20 | 18 2 | 7 20 | 29 6 | 19 11 | 10 1 | 11 25 | 18 28 |
| 19 | 6 | 23 47 8 | 4 39 | 3 27 29 | 10 57 | 19 44 | 7 30 | 11 0 21 | 19 14 | 9 58 | 11 26 | 18 29 |
| 20 | 7 | 23 51 5 | 5 39 | 4 9 27 | 11 33 | 21 28 | 7 40 | 1 36 | 19 17 | 9 55 | 11 27 | 18 30 |
| 21 | 8 | 23 55 1 | 6 39 | 4 21 19 | 12 10 | 23 13 | 7 50 | 2 51 | 19 20 | 9 53 | 11 28 | 18 31 |
| 22 | 9 | 23 58 58 | 7 38 | 5 3 9 | 12 47 | 24 59 | 8 00 | 4 5 | 19 23 | 9 51 | 11 29 | 18 32 |
| 23 | 10 | 0 2 54 | 8 38 | 5 14 58 | 13 23 | 26 46 | 8 10 | 5 20 | 19 26 | 9 48 | 11 30 | 18 33 |
| 24 | 11 | 0 6 51 | 9 37 | 5 26 48 | 14 00 | 28 35 | 8 20 | 6 34 | 19 29 | 9 45 | 11 31 | 18 33 |
| 25 | 12 | 0 10 47 | 10 36 | 6 8 41 | 14 37 | 11 0 24 | 8 30 | 7 49 | 19 32 | 9 42 | 11 31 | 18 34 |
| 26 | 13 | 0 14 44 | 11 36 | 6 20 40 | 15 14 | 2 16 | 8 41 | 9 4 | 19 35 | 9 39 | 11 32 | 18 35 |
| 27 | 14 | 0 18 41 | 12 35 | 7 2 47 | 15 50 | 4 8 | 8 51 | 10 18 | 19 38 | 9 36 | 11 33 | 18 35 |
| 28 | 15 | 0 22 37 | 13 35 | 7 15 4 | 16 27 | 6 2 | 9 2 | 11 33 | 19 40 | 9 33 | 11 34 | 18 36 |
| 29 | 16 | 0 26 34 | 14 34 | 7 27 34 | 17 4 | 7 57 | 9 12 | 12 47 | 19 43 | 9 30 | 11 34 | 18 36 |
| 30 | 17 | 0 30 30 | 15 33 | 8 10 22 | 17 41 | 9 53 | 9 23 | 14 2 | 19 45 | 9 27 | 11 35 | 18 37 |
| 31 | 18 | 0 34 27 | 11 16 33 | 8 23 29 | 1 18 18 | 11 11 51 | 1 9 34 | 11 15 16 | 8 19 47 | 10 9 24 | 8 11 35 | 8 18 37 |
| ஏப்ரில் 1989 | | | | | | | | | | | | |
| 1 | 19 | 0 38 23 | 11 17 32 | 9 7 00 | 1 18 54 | 11 13 50 | 1 9 45 | 11 16 31 | 8 19 49 | 10 9 19 | 8 11 36 | 8 18 38 |
| 2 | 20 | 0 42 19 | 18 31 | 9 20 57 | 19 31 | 15 50 | 9 56 | 17 45 | 19 52 | 9 15 | 11 36 | 18 38 |
| 3 | 21 | 0 46 16 | 19 30 | 10 5 19 | 20 8 | 17 51 | 10 7 | 19 00 | 19 54 | 9 12 | 11 36 | 18 39 |
| 4 | 22 | 0 50 13 | 20 29 | 10 20 4 | 20 45 | 19 53 | 10 19 | 20 14 | 19 55 | 9 7 | 11 37 | 18 39 |
| 5 | 23 | 0 54 10 | 21 29 | 11 5 7 | 21 22 | 21 56 | 10 30 | 21 29 | 19 57 | 9 2 | 11 37 | 18 39 |
| 6 | 24 | 0 58 6 | 22 28 | 11 20 21 | 21 59 | 24 00 | 10 41 | 22 43 | 19 59 | 8 59 | 11 37 | 18 39 |
| 7 | 25 | 1 2 3 | 23 27 | 0 5 35 | 22 36 | 26 5 | 10 53 | 23 58 | 20 1 | 8 56 | 11 37 | 18 40 |
| 8 | 26 | 1 5 59 | 24 26 | 0 20 38 | 23 13 | 28 10 | 11 5 | 25 12 | 20 2 | 8 53 | 11 37 | 18 40 |
| 9 | 27 | 1 9 56 | 25 25 | 1 5 22 | 23 50 | 0 0 15 | 11 16 | 26 26 | 20 4 | 8 50 | 11 38 | 18 40 |
| 10 | 28 | 1 13 52 | 26 24 | 1 19 41 | 24 27 | 2 20 | 11 28 | 27 41 | 20 5 | 8 47 | 11 37 | 18 40 |
| 11 | 29 | 1 17 49 | 27 23 | 2 3 30 | 25 4 | 4 25 | 11 40 | 28 55 | 20 6 | 8 44 | 11 37 | 18 40 |
| 12 | 30 | 1 21 45 | 28 21 | 2 16 50 | 25 40 | 6 30 | 11 52 | 0 0 10 | 20 7 | 8 41 | 11 37 | 18 40 |
| 13 | 31 | 1 25 42 | 11 29 20 | 2 29 43 | 1 26 18 | 0 8 33 | 1 12 4 | 0 1 24 | 8 20 8 | 10 8 37 | 8 11 37 | 8 18 41 |

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரிகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவாகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (பங்குனி மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதீ வரை)

(சூரிய உதயம் 6 மணி 21 நிமிஷம்)

| வாரம் | 6...21 7...21 | 7...21 8...21 | 8...21 9...21 | 9...21 10...21 | 10...21 11...21 | 11...21 12...21 | 12...21 1...21 | 1...21 2...21 | 2...21 3...21 | 3...21 4...21 | 4...21 5...21 | 5...21 6...21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# நாள் சுபமா?

பங் 1 செவ் (14-3-89) அட்டமி பி.இ. 3-31 வரை மிருகசீரிடம், சித்தம பி.இ 3-39 வரை. காரடையா நோன்பு அசுபதினம். ராகு 3-21—4-51

பங் 2 புத (15-3-89) நவமி பி.இ. 3-44 வரை திருவாதிரை பி.இ. 4-29வரை. சித்தம் சுபதினமன்று ராகு 12-21—1-51

பங் 3 வியா (16-3-89) தசமி பி.இ 4-38 வரை. புனர்பூசம் பி.இ 5-59 வரை, அமிர்தசித்தம் சுப கருமங்களுக்கு உகந்ததினம். ராகு 1-51—3-21

பங் 4 வெ (17-3-89) ஏகாதசி பி.இ 6-07 வரை, பூசம் முழுவதும் மரணம், ஸ்மார்த்த ஏகாதசிவிரதம் அசுபதினம். ராகு 10-50—12.20

பங் 5 சனி (18-3-89) துவாதசி முழுவதும், பூசம்-சித்தம் காலே 8-02 வரை, வைஷ்ணவஏகாதசிவிரதம். காலே 8-00 மணிக்குள் அவசரகருமங்கள் செய்யலாம். ராகு 9-20—10-50

பங் 6 ஞாயி (19-3-89) துவாதசி காலே 8-04வரை ஆயிலியம் பகல் 10-32 வரை. மரணம் கரிநாள் பிரதோஷவிரதம், அசுபதினம்.
ராகு 4-50—6-20

பங் 7 திங் (20-3-89) திரயோதசி பகல் 10-23வரை, மகம் - மரணம் பகல் 1-21 வரை. சுபதினமன்று. ராகு 7-49—9-19

பங் 8 செவ் (21-3-89) சதுர்த்தசி பகல் 12-53வரை பூரம் மாலே 4-21 வரை, சித்தாமிர்தம் சுபதினம் அல்ல. ராகு 3-18—4-48

பங் 9 புத (22-3-89) பூரணை பகல் 3-29 வரை. உத்தரம் மாலே 7-26 வரை, அமிர்தசித்தம், பூரணை விரதம், பங்குனிஉத்தரம், நற்கருமங்களுக்கு உகந்ததினம். ராகு 12-17—1-47

பங் 10 வியா (23-3-89) பிரதமை மாலே 6-04வரை, அத்தம் இரவு 10-30 வரை, சித்தம் சுபகருமங்கள் செய்யலாம், ராகு 1-46—3-16

பங் 11 வெ (24-3-89) துவிதியை இரவு 8-23வரை. சித்திரை - மரணம் பி.இ 1-26 வரை, அசுபதினம். ராகு 10-45—12-15

பங் 12 சனி (25-3-89) திரிதியை இரவு 10-50 வ. சுவாதி பி.இ. 4-10 வரை. அமிர்தசித்தம், அவசர கருமங்கள் செய்யலாம். ராகு 9-15—10-45

பங் 13 ஞாயி (26-3-89) சதுர்த்தி இரவு 12-49 வ. விசாகம் முழுவதும் மரணம். சுபதினமல்ல. ராகு 4-43—6-13

பங் 14 திங் (27-3-89) விசாகம்-மரணம் காலே 6-36 வரை, பஞ்சமி-சித்தம் பி.இ. 2-23 வரை, சுப கருமங்களே விலக்குக. ராகு 7-43—9-13

பங் 15 செவ் (28-3-89) ஷஷ்டி பி.இ. 3-26 வரை, அனுஷம்-சித்தம் 8-36 வரை, கரிநாள். அவசர கருமங்களே காலே 8-36க்கு முன் செய்க,
ராகு 3-14—4-44

பங் 16 புத (29-3-89) ஸப்தமி பி.இ. 3-54 வரை, கேட்டை-சித்தம் பகல் 10-06 வரை. சுபதினமல்ல, ராகு 12-13—1-43

பங் 17 வியா (30-3-89) அஷ்டமி பி.இ.3-40 வரை, மூலம் பகல் 11-00 வரை, சித்தம் அசுபதினம். ராகு 1-43—3-13

பங் 18 வெள் (31-3-89) நவமி பி.இ. 2-44 வரை, பூராடம்-மரணம் பகல் 11-12 வரை, அசுபதினம். ராகு 10-42—12-12

பங் 19 சனி (1-4-89) தசமி-சித்தம் பி.இ. 1-04 வ. உத்தராடம் பகல் 10-43 வரை, கரிநாள். சுபகருமங்கள் செய்யலாம். ராகு 9-11—10-42

பங் 20 ஞாயி (2-4-89) ஏகாதசி இரவு 10-46 வ. திருவோணம்-அமிர்தம் காலே 9-33 வரை, ஸர்வ ஏகாதசிவிரதம் காலே 9 மணிக்கு முன் அவசர கருமங்கள் செய்யலாம். ராகு 4-41—6-12

பங் 21 திங் (3-4-89) துவாதசி மாலே 7-52 வரை, அவிட்டம் 7-44 வரை, சதயம் - சித்தம் பி.இ. 5-24 வரை, அவசர கருமங்கள் செய்யலாம். ராகு 7-41—9-12

பங் 22 செவ் (4-4-89) திரயோதசி மாலே 4-32 வ. பூரட்டாதி-மரணம் பி.இ. 2-40 வரை, பிரதோஷ விரதம், அசுபதினம். ராகு 3-10—4-41

பங் 23 புத (5-4-89) சதுர்த்தசி பகல் 12-52 வரை, உத்தரட்டாதி சித்தம் இரவு 11-42 வரை, அமாவாசை விரதம் அசுபதினம் ராகு 12-10—1-41

பங் 24 வியா (6-4-89) அமாவாசை காலே 9-03வ பிரதமை பி.இ 5-17 வரை, ரேவதி 8-42வரை. சித்தாமிர்தம். நற்கருமங்களுக்குச் சிறந்ததினம். ராகு 1-39—3-10

பங் 25 வெள் (7-4-89) துவிதியை பி.இ 1-43வரை அசுவினி மாலே 5-48 வரை, அமிர்தசித்தம் சந்திரதரிசனம். அவசர கருமங்கள் செய்யலாம்.

பங் 26 சனி (8-4-89) திரிதியை இரவு 10-32 வரை பரணி - மரணம் 3-15 வரை, கார்த்திகை விரதம் அசுபதினம். ராகு 9-07—10-38

பங் 27 ஞா (9-4-89) சதுர்த்தி மாலை 7-54 வரை கார்த்திகை பகல் 1-11 வரை. சித்தம் சதுர்த்தி விரதம். அசுபதினம். ராகு 4-37—6-08

பங் 28 திங் (10-4-89) பஞ்சமி மாலை 5-58 வரை, ரோகிணி பகல் 11-47 வரை, அமிர்தசித்தம் சுப கருமங்களுக்கு உகந்ததினம். ராகு 7-36—9-07

பங் 29 செவ் (11-4-89) ஷஷ்டி மாலை 4-50வரை, மிருகசீரிடம் - சித்தம் பகல் 11-08 வரை, வயற் செய்கைக்கு நன்று. ராகு 3-06—4-37

பங் 30 புத (12-4-89) ஸப்தமி மாலை 4-33 வரை திருவாதிரை பகல் 11—20 வரை, சித்தம். அசுப தினம் ராகு 12-05—1-36

பங் 31 வியா (13-4—89) அஷ்டமி மாலை 5-07 வ. புனர்பூசம் பகல் 12-22 வரை, அமிர்தசித்தம் சிறந்ததினமன்று. மாலை 5-40 முதல் இரவு 1-40 வரையுள்ள புண்ணிய காலத்தில் அனைவரும் மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்க. ராகு 1-35—3-06

---

## பங்குனித் திங்கள்

பங்குனி மாதத்தில் வரும் திங்கட்கிழமைகள் சக்தி வழிபாட்டிற்குச் சிறந்தனவாகும். அதிலும் பத்தினித்தெய்வமாகிய கண்ணகி தேவியின் வழிபாட்டிற்கு மிகச் சிறப்பாகும்.

இத்தினங்களில் அனேகமாக இந்துக்கள் கண்ணகிகோவில்களில் அபிடேகஆராதனைகளுடன் மிக விஷேடமாகப் பொங்கல் வழிபாட்டையே மேற்கொள்ளுகின்றனர். பொங்கற்படையலுடன் நீர்ச்சோறு, கஞ்சி முதலிய மென்மையான பானவகைகளை அம்மனுக்குப் படைத்து அடியார்களுக்கும் கொடுக்கின்றனர். சிவசக்தியே பத்தினித்தெய்வம் மூலமாக ஆன்மாக்கட்கு அருள்புரிகின்றுள் எனலாம்.

---

முக்கிய குறிப்பு:-

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். ஆ-ர்

---

## சீதனத்துடன் அழகிய மனைவி வேண்டுமா?

புதன்மேட்டில் தாரரேகை நன்ருக வியாபித்து, விதிரேகை சந்திர மேட்டிலிருந்து குருமேட்டிற்குச் சென்று நட்சத்திரக் குறி இருக்கவும், சுக்கிரமேடு வலுக்க காணி, மணகளுடன் அதிக செல்வமும் அழகுமுள்ள பெண் கிடைப்பாள். வரும் மனைவியால் ராஜயோகம் உண்டாகும்.

எஸ்.எஸ்.எஸ்.எம். தேவசர்மா, குன்றக்குடி

---

## இலங்கை சோதிட ஆய்வு மன்றம்

மேற்படி மன்றத்தின் 1989-ம் வருட தை மாசி மாதக்கூட்டங்கள் முறையே 29-01-89 இல் மன்றத்தலைவர் கலாநிதி. நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் காலை 10 மணிக்கும்; 26-02-89 இல் மன்ற உபதலைவர் திரு. இ. முத்துலிங்கம் தலைமையில் காலை 10 மணிக்கும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றன.

இவ்விரு சந்திப்பின்போதும் பொதுச்செயலாளரால் சென்ற கூட்ட அறிக்கையும் பொருளாளரால் பொருள் நிலை அறிக்கையும் வாசிக்கப்பட்டு சபையால் ஏற்கப்பட்டன.

தைமாதக்கூட்டத்தில் புதியஆண்டிற்கான நிர்வாகசபை பின்வருமாறு தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர்: கலாநிதி. நா. சுப்பிரமணிய ஐயர். உப தலைவர்கள்: திரு. இ. முத்துலிங்கம், திரு. இ. கந்தையா, செயலாளர்: திரு. கி. இரத்தினவடிவேல், இணைச்செயலாளர்: திரு. சு. நடராசா, பொருளாளர்: திரு. வே. சின்னத்துரை, செயற்குழு உறுப்பினர்கள்: திரு. ம. கனகரத்தினம், திரு. த. மகேந்திரராசா, திருமதி. சோ. பரமேஸ்வரி, திரு. பொ. சேனாதிராசா.

மாசிமாதக் கூட்டத்தின்போது சோதிடர் ரி. எக்ஸ். செல்வநாதன் 'அமெரிக்க இரகசிய சாஸ்திரவிற்பன்னர்கள் அமெரிக்க சரித்திரத்தை மாற்றி உள்ளார்களா?' எனுந்தலைப்பில் உரையாற்றினர்.

இவ்விரு சந்திப்புக்களும் சில கலந்துரையாடல்களைத் தொடர்ந்து தலைவரின் நன்றி உரையுடன் இனிது நிறைவேறின.

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### விபவ ஞு பங்குனி மீ 1-ந் தேதி முதல் 31 -ந் தேதி வரை. (14-3-89 முதல் 13-4-89 வரை)

| இங் மாரிச் | தமி பங் | வாரம் | மீனம் ம.மி. முதல் (காலை) | மீனம் ம.மி. வரை (காலை) | மேடம் ம. மி. வரை (காலை) | இடபம் ம. மி. வரை (பகல்) | மிதுனம் ம. மி. வரை (பகல்) | கடகம் ம. மி. வரை (பி.ப) | சிங்கம் ம. மி. வரை (மாலை) | கன்னி ம. மி. வரை (இரவு) | துலா ம. மி. வரை (இரவு) | விருச்சி ம. மி. வரை (இரவு) | தனுசு ம. மி. வரை (பி.இ) | மகரம் ம. மி. வரை (பி.இ) | கும்பம் ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | செவ் | 6 21 | 8 4 | 9 54 | 11 56 | 2 8 | 4 15 | 6 16 | 8 15 | 10 19 | 12 29 | 2 37 | 4 33 | 6 18 |
| 15 | 2 | புதன் | 6 18 | 8 0 | 9 50 | 11 52 | 2 4 | 4 11 | 6 12 | 8 11 | 10 15 | 12 25 | 2 33 | 4 29 | 6 14 |
| 16 | 3 | வியா | 6 14 | 7 56 | 9 46 | 11 48 | 2 0 | 4 7 | 6 8 | 8 07 | 10 11 | 12 21 | 2 29 | 4 25 | 6 10 |
| 17 | 4 | வெள் | 6 10 | 7 53 | 9 43 | 11 45 | 1 57 | 4 4 | 6 5 | 8 04 | 10 8 | 12 18 | 2 26 | 4 22 | 6 7 |
| 18 | 5 | சனி | 6 7 | 7 50 | 9 40 | 11 42 | 1 54 | 4 1 | 6 2 | 8 1 | 10 5 | 12 15 | 2 23 | 4 19 | 6 4 |
| 19 | 6 | ஞாயி | 6 4 | 7 45 | 9 35 | 11 37 | 1 49 | 3 56 | 5 57 | 7 56 | 10 0 | 12 10 | 2 18 | 4 14 | 5 59 |
| 20 | 7 | திங் | 5 59 | 7 41 | 9 31 | 11 33 | 1 45 | 3 52 | 5 53 | 7 52 | 9 56 | 12 6 | 2 14 | 4 10 | 5 55 |
| 21 | 8 | செவ் | 5 55 | 7 37 | 9 27 | 11 29 | 1 41 | 3 48 | 5 49 | 7 48 | 9 52 | 12 2 | 2 10 | 4 6 | 5 51 |
| 22 | 9 | புதன் | 5 51 | 7 33 | 9 23 | 11 25 | 1 37 | 3 44 | 5 45 | 7 44 | 9 48 | 11 58 | 2 6 | 4 2 | 5 47 |
| 23 | 10 | வியா | 5 47 | 7 29 | 9 19 | 11 21 | 1 33 | 3 40 | 5 41 | 7 40 | 9 44 | 11 54 | 2 2 | 3 58 | 5 43 |
| 24 | 11 | வெள் | 5 43 | 7 25 | 9 15 | 11 17 | 1 29 | 3 36 | 5 37 | 7 36 | 9 40 | 11 50 | 1 58 | 3 54 | 5 39 |
| 25 | 12 | சனி | 5 39 | 7 20 | 9 10 | 11 12 | 1 24 | 3 31 | 5 32 | 7 31 | 9 35 | 11 45 | 1 53 | 3 49 | 5 34 |
| 26 | 13 | ஞாயி | 5 34 | 7 16 | 9 6 | 11 8 | 1 20 | 3 27 | 5 28 | 7 27 | 9 31 | 11 41 | 1 49 | 3 45 | 5 30 |
| 27 | 14 | திங் | 5 30 | 7 13 | 9 3 | 11 5 | 1 17 | 3 24 | 5 25 | 7 24 | 9 28 | 11 38 | 1 46 | 3 42 | 5 27 |
| 28 | 15 | செவ் | 5 27 | 7 8 | 8 58 | 11 0 | 1 12 | 3 19 | 5 20 | 7 19 | 9 23 | 11 33 | 1 41 | 3 37 | 5 22 |
| 29 | 16 | புதன் | 5 22 | 7 5 | 8 55 | 10 57 | 1 9 | 3 16 | 5 17 | 7 16 | 9 20 | 11 30 | 1 38 | 3 34 | 5 19 |
| 30 | 17 | வியா | 5 19 | 7 1 | 8 51 | 10 53 | 1 5 | 3 12 | 5 13 | 7 12 | 9 16 | 11 26 | 1 34 | 3 30 | 5 15 |
| 31 | 18 | வெள் | 5 15 | 6 56 | 8 46 | 10 48 | 1 0 | 3 7 | 5 8 | 7 7 | 9 11 | 11 21 | 1 29 | 3 25 | 5 10 |
| ஏப் 1989 1 | 19 | சனி | 5 10 | 6 53 | 8 43 | 10 45 | 12 57 | 3 4 | 5 5 | 7 4 | 9 8 | 11 18 | 1 26 | 3 22 | 5 7 |
| 2 | 20 | ஞாயி | 5 7 | 6 50 | 8 40 | 10 42 | 12 54 | 3 1 | 5 2 | 7 1 | 9 5 | 11 15 | 1 23 | 3 19 | 5 4 |
| 3 | 21 | திங் | 5 4 | 6 46 | 8 36 | 10 38 | 12 50 | 2 57 | 4 58 | 6 57 | 9 1 | 11 11 | 1 19 | 3 15 | 5 0 |
| 4 | 22 | செவ் | 5 0 | 6 42 | 8 32 | 10 34 | 12 46 | 2 53 | 4 54 | 6 53 | 8 57 | 11 7 | 1 15 | 3 11 | 4 56 |
| 5 | 23 | புதன் | 4 56 | 6 38 | 8 28 | 10 30 | 12 42 | 2 49 | 4 50 | 6 49 | 8 53 | 11 3 | 1 11 | 3 7 | 4 52 |
| 6 | 24 | வியா | 4 52 | 6 34 | 8 24 | 10 26 | 12 38 | 2 45 | 4 46 | 6 45 | 8 49 | 10 59 | 1 7 | 3 3 | 4 48 |
| 7 | 25 | வெள் | 4 48 | 6 30 | 8 20 | 10 22 | 12 34 | 2 41 | 4 42 | 6 41 | 8 45 | 10 55 | 12 3 | 2 59 | 4 44 |
| 8 | 26 | சனி | 4 44 | 6 26 | 8 16 | 10 18 | 12 30 | 2 37 | 4 38 | 6 37 | 8 41 | 10 51 | 12 59 | 2 55 | 4 40 |
| 9 | 27 | ஞாயி | 4 40 | 6 22 | 8 12 | 10 14 | 12 26 | 2 33 | 4 34 | 6 33 | 8 37 | 10 47 | 12 55 | 2 51 | 4 36 |
| 10 | 28 | திங் | 4 36 | 6 17 | 8 7 | 10 9 | 12 21 | 2 28 | 4 29 | 6 28 | 8 32 | 10 42 | 12 50 | 2 46 | 4 31 |
| 11 | 29 | செவ் | 4 31 | 6 14 | 8 4 | 10 6 | 12 18 | 2 25 | 4 26 | 6 25 | 8 29 | 10 39 | 12 47 | 2 43 | 4 28 |
| 12 | 30 | புதன் | 4 28 | 6 9 | 7 59 | 10 1 | 12 13 | 2 20 | 4 21 | 6 20 | 8 24 | 10 34 | 12 42 | 2 38 | 4 23 |
| 13 | 31 | வியா | 4 23 | 6 5 | **7 55** | **9 57** | 12 9 | 2 16 | 4 17 | 6 16 | 8 20 | 10 30 | 12 38 | 2 34 | 4 19 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: பங்குனி 31உ (13-3-89) பகல் 9-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (7-55 — 9-57) இடபலக்னம்

# பங்குனி மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| சூ | | குரு செவ் | |
| கும்பம்: ராகு புத சுக் | பங்குனி மாதக் கிரக நிலை | | கடகம்: |
| மகரம்: | | | சிங்கம்: கேது |
| சனி, யுரே நெப் | | | |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரக மாற்றங்கள்

5உ (18-3-89) இரவு 10-41க்கு மீன-சுக்
11உ (24-3-89) இரவு 12-09க்கு மீன-புத
26உ (8-4-89) இரவு 12-36க்கு மே-புத
29உ (11-4-89) இரவு 2-25க்கு மே-சுக்
9உ புதன் அஸ்தமனம்
29உ யுரேனஸ் வக்ராரம்பம்

சுக்கிரன் இம்மாதம் முழுவதும் அஸ் தமனம்.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாசி | 1உ | (14-3-89) | பகல் | 3-30 | முதல் | மிதுனம் |
| | 3உ | (16-3-89) | இரவு | 11-33 | ,, | கடகம் |
| | 6உ | (19-3-89) | பகல் | 10-32 | ,, | சிங்கம் |
| | 8உ | (21-3-89) | இரவு | 11-07 | ,, | கன்னி |
| | 11உ | (24-3-89) | பகல் | 11-59 | ,, | துலாம் |
| | 13உ | (26-3-89) | இரவு | 12-01 | ,, | விருச்சிகம் |
| | 16உ | (29-3-89) | பகல் | 10-06 | ,, | தனுசு |
| | 18உ | (31-3-89) | மாலை | 5-09 | ,, | மகரம் |
| | 20உ | (2-4-89) | இரவு | 8-42 | ,, | கும்பம் |
| | 22உ | (4-4 89) | இரவு | 9-23 | ,, | மீனம் |
| | 24உ | (6-4-89) | இரவு | 8-41 | ,, | மேடம் |
| | 26உ | (8-4-89) | இரவு | 8-40 | ,, | இடபம் |
| | 28உ | (10-4-89) | இரவு | 11-21 | ,, | மிதுனம் |
| | 31உ | (13-4-89) | காலை | 6-02 | ,, | கடகம் |

### கிரகநிலை குறிக்க:-

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி பங்குனி மீ 31 உ பகல் 9-00 மணிக்கு இடப லக்னம் என அறிந்து கொண்ட பின் 'இடபம்' என்ற கட்டிக்கு 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது மிதுனலக்னம் உதயமாகின்றது. லக்கினதிபதி புதன் திரிகோணம் பெறுவது நன்று. எனினும் லக்கினதிபதியையும், லக்கினத்தையும் சனி திருஷ்டிப்பது விரும்பத்தக்க தல்ல. சூரியன் 10ல் இருப்பதால் அரசாங்க நடவடிக்கைகள் யாவும் நன்கு அமுல் நடத்தப்படும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும். எனினும் ஆங்காங்கு அமைதியைக்குலைக்கும் சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்.

# பங்குனி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

14-3-89—13-4-89

சூரியன்:- 14-3-89 பகல் 1-08
மீனராசிப் பிரவேசம்.
14-3-89 உதயம் காலை 6-21
14-3-89 உச்சம் பகல் 12-19
14-3-89 அஸ்தமனம் மாலை 6-18
29-3-89 உதயம் காலை 6-13
29-3-89 உச்சம் பகல் 12-15
29-3-89 அஸ்தமனம் 6-17

சந்திரன்:- 22-3-89 பூரணை பகல் 3-29
6-4-89 அமாவாசை காலை 9-03
7-4-89 சந்திரதரிசனம்

### கிரகங்கள்

புதன்:- மாதாரம்பத்தில் சூரிய உதயம் முன் கிழக்குவானில் 19பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் 22-3-89ல் கிழக்கில் அஸ்தமனமடைவதால் அதன்பின் பார்க்க முடியாது. 24-3-89ல் மீனராசியில் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்:- மாதம் முழுவதும் சுக்கிரன் அஸ்தமனமாயிருப்பதால் அதனைப் பார்க்கமுடியாது. 18-3-89ல் மீனராசியிலும், 11-4-89ல் மேடராசியிலும் பிரவேசிக்கின்றது.

செவ்வாய்:- மாதாரம்பத்தில் சூரியாஸ்தமனத்தின் பின் மேற்குவானில் உச்சிக்கு மேற்கில் 21பாகை சரிந்து காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 33 பாகை சரிந்து காணப்படும். இம் மாதம் இடபராசியிற் சஞ்சரிக்கின்றது.

வியாழன்:- மாதாரம்பத்தில் உச்சிக்கு மேற்கில் 22பாகை சரிந்துதோன்றும் இக்கிரகம் மாத முடிவில் உச்சிக்கு மேற்கில் 43பாகை சரிந்து காணப்படும். இடபராசியிலேயே சஞ்சரிக்கிறது.

சனி:- மாதாரப்பத்தில் சூரிய உதயத்தின் முன் உச்சிக்குக் கிழக்கில் 20பாகை சரிந்து காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சிக்கு மேற்கே 9பாகை சரிந்து காணப்படும். தனுராசியிலேயே சஞ்சரிக்கின்றது.

யுரேனஸ்:- தனுராசியிலேயே சஞ்சரிக்கின்றது. 11-4-89ல் வக்கிரகதியிற்செல்ல ஆரம்பிக்கும்.

நெப்டியூன்:- தனுராசியிலேயே சஞ்சரிக்கிறது.

புளுட்டோ:- வக்கிரகதியில் துலாராசியிலேயே சஞ்சரிக்கிறது.

### சமாகமங்கள்

19-3-89 நள்ளிரவுக்கு முன் மகநட்சத்திரம் சந்திரனால் மறைக்கப்படும்.

28-3-89 காலை கேட்டை நட்சத்திரம் சந்திரனின் வடக்குப்புறத்தில் ஒட்டினாற்போல் காணப்படும். அன்று உதயம்முன் அவதானிக்கவும்.

30-3-89 நள்ளிரவு சந்திரனுக்கு வடக்கு சனி 4½ பாகை.

9-4-89 பிற்பகல் சந்திரனுக்குத் தெற்கு வியாழன் 5½பாகை சூரிய அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

10-4-89 பிற்பகல் சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 3½பாகை சூரிய அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.


இனிய அன்பு நெஞ்சங்களே!

எதிர்வரும் சித்திரை மலர்

**சோதிடமலரின்**


**12-ம் ஆண்டுமலர்**

ஷ மலர் பல அம்சங்களுடன் அதிக பக்கங்களைத் தாங்கி வெளிவரவிருக்கிறது.

அதில் உங்கள் கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் மற்றும் ஆக்கங்களும் இடம்பெறவேண்டுமா?

எழுதுங்கள்:- 25-03-89க்கு முன்.

ஆசிரியர், சோதிடமலர்
திருக்கணித நிலையம்
மட்டுவில் — சாவகச்சேரி.




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

## 14-3-89 முதல் 13-4-89 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 12ல் (விரையத்தில்) ரஜஸ மூர்த்தியாக வலம்வருகின்றார். சூரியன் தானபலம் குறைந்தாலும் மூர்த்திபலம் பெறுவதால் நன்மை தீமைகலந்த பலன்கள் நிகழும். பொதுவாக இவர்களின் உடல்நலம், குடும்பநலம் எல்லாம் சீராக இருக்கும். இராசாங்க உதவிகள் கிடைக்கும். பெரியவர்கள், மதத்தலைவர்கள் முதலானவர்களின் ஆசிகளும் உதவிகளும் கிடைக்கும். வீட்டில் அல்லது குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் கொண்டாட்டங்களும் நிகழும். சிலருக்குப் புண்ணிய தலயாத்திரைப் பலன்களும் நிகழச் சாத்தியம் உண்டு.

குடும்பத்தவர்களுக்கு வருமானம் மனநிறைவு தரும். வீட்டில் அல்லது நெருங்கிய இனபந்துக்களின் சந்தோஷகொண்டாட்டங்கள் நிகழும். புத்திரர் பந்து மித்திரர் உதவி ஒத்தாசைகள் கிட்டும்.

வர்த்தகர்களுக்கு மாதஆரம்பத்தில் சுறுசுறுப்புடன் இயங்கிவந்த வியாபாரம் மாதக்கடைசியில் மந்தநிலையடையும். வியாபாரி புதனின்பலம் குறைவதால் புதியமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நல்லெண்ணங்கள் இந்தமாதமும் தொடரும். ஆனால் வீண்செலவுகளும் ஏற்படும். உடன்உத்தியோகத்தர்களின் உதவிஒத்தாசைகளும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச் செலவுகள் இந்தமாதமும் கூடும், கணிசமான பயிர்விளைவுகளால் நட்டம் வராமல் சமாளிப்பார்கள். விவசாயப்பண்ணைகளிலும் நட்டம் வராது.


தொழிலாளர் வேலைவசதிகள் பெறுவர். தினச் சம்பளகாரர் போதிய வருமானம் பெறுவர். தொழிலாளர் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படும். ஒப்பந்தத் தொழில்களிலும் லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். மருத்துவம், பொறியியல், சட்டத்துறை மாணவர்கள் சிறப்பாக முன்னேற்றம் பெறுவர், வெளிநாட்டு கல்விவாய்ப்புக்கள் கைகூடும்.

பெண்களுக்கு இந்தமாதமும் மனநிறைவு ஏற்படும். பெரியவர்களின் உதவிஒத்தாசைகள் பெறுவர். விவாகாதி சுபமங்களங்களும் நிகழச் சாத்தியமானகாலம்.

அதிஷ்டநாட்கள்:- மார்ச்.14இ,15,16,20,21,29
ஏப்; 2இ,3,4பக 6இர,7,8

துரதிஷ்டநாட்கள்:- மார்ச்.22,23,24மு.ப,27,28
ஏப்.4இர,5,6பக.




கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் கால்

இடபராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 11ல் (லாபத்தில) சுவர்ண மூர்த்தியாகப் பலத்துடன் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். கடந்தகாலங்களில் அனுபவித்த இஷ்டநஷ்டங்களிலிருந்து சிறிதுசிறிதாக விடுதலையடைவார்கள். பொதுவாக இவர்களின் தேகநலம் குடும்பநலம் முதலியன சீராக இருக்கும். பொருள்வருமானமும் கூடத்தொடங்கும். தொழில் அல்லது வேலைவாய்ப்புக்களும் கிடைக்கும். இராசாங்க உதவிகளும் கிடைக்கும். பிதிர்வழி உறவினரால் உதவிஒத்தாசைகளையும் பெறுவார்கள். பிரதான கிரகங்களான வியாழன் சென்மத்திலும் சனி அட்டமத்திலும் சஞ்சரிப்பதால் எந்தமுயற்சியிலும் அலைச்சல், காரிய தாமதம் பொருள் நட்டம், பந்துமித்திரர் துன்பம், முதலானவையும் கலந்து நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு ஓரளவு மனநிறைவான மாதம். கணவன் மனைவியருக்கிடையில் நல்லுறவும் ஏற்படும். குடும்பவருமானம் கூடும். உறவினர் புத்திரர்களால் மனவேதனைகள் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு புதன் கோசாரசஞ்சாரபலம் பெறுவதால் வியாபாரம் முன்னேற்றம்காணும். பழைய முதலீடுகளிலும் வருமானம் வரத்தொடங்கும். மொத்த வியாபாரிகளுக்கு லாபம் கூடும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம் பெறுவது எதிர்பார்ப்புக்களை பெரும்பாலும் நிறைவு பெறச்செய்யும். பதவி உயர்வு முதலானவையும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு இந்தமாதமும் பயிர்ச்சேதமும் உற்பத்திச்செலவுகள் அதிகரிப்பும் தொடரும். எனினும் நட்டம் வராது. விளைபொருட்களுக்கு நல்லசந்தை வாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளருக்கு வேலையில்லாப்பிரச்சனை வளர்ந்து கொண்டுவரும். தொழிற்பிணக்குகளும் கூடும். தினச்சம்பள வேலைசெய்வோர் நாளாந்த சீவியத்துக்கு கஷ்டம் ஏற்படலாம்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். சுயமுயற்சியுடையவர்கள் சிறப்புச் சித்திகளும் பெறுவர். சிலருக்குப் புலமைப்பரிசில்கள் கூடக் கிடைக்கக்கூடும்.

பெண்களுக்கு கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் ஓரளவு ஆறுதல் கிடைக்கும். விவாக முயற்சிகள் பெரும்பாலும் இழுபறியாகவே இருக்கும்; பெண்களுக்குப் பதவியுயர்வுகளும்கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்;- மார்ச்.14பக,17,18,19மு.ப
ஏப்.1,2பக,4இர,5,6பக,9,10

துரதிஷ்டநாட்கள்:- மார்.24பி.ப25,26,29பக,30
ஏப்.6இர,7,8.




மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

மிதுன இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 10ல் லோகமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்வது நன்மை தராது. இவர் மூர்த்திபலத்தை இழப்பினும் தானபெலம் பெறுவதால் பெரும்பாலும் நன்மை கலந்த தீயபலன்கள் நிகழும். இவர்களின் உடல்நலம் குன்றுவதுடன் மனநிலையும் தாக்கப்படக் கூடும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். குடும்பநலம் பாதிப்பதுடன் புத்திரர்-உறவினர்களால் செலவுகளும் பகை-விரோதங்களும் ஏற்படக் கூடும். இராசாங்க உதவிகள் கிடைப்பதும் கடினம். பொது

வாக இவர்களுக்குத் தெய்வ பக்தியும் நவக்கிரக வழிபாடுகளும் மனச் சாந்திபெறத் துணைசெய்யும்.

குடும்பத்தினருக்கு பிணக்குகள் அடிக்கடி ஏற்படும். குடும்ப சுகவீனங்களும் திடீர்நெருக்கடிகளும் தோன்றுவதால் தாக்கம் உண்டாகும். இனசன பந்துக்களுடன் பகை விரோதங்களும் ஏற்படக்கூடும்.

வர்த்தகர்களுக்கு கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் வியாபாரம் முன்னேற்றம் பெறத் தொடங்கும். எனினும் நிதி இருப்புகளில் பற்றுக் குறைவு தொடரும்.

உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு பிரச்சனைகள் தோன்றும். மேலதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகளால் தண்டிக்கப்படவும் கூடும். சிலருக்கு இடமாற்றங்கள் கூடக் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் குன்றும். உற்பத்திச் செலவுகளும் அதிகரிக்கும். குத்தகை விவசாயம் செய்வோர் பெரிதும் தாக்கமடைவர். கூலியாட்களின் கெடுபிடிகளும் தொடரும்.

தொழிலாளர் மத்தியில் அமைதியின்மையும் தொழில் பிணக்குகளும் ஏற்படுதலால் வேலையில்லாப் பிரச்சினை விசுபரூபமெடுக்கும். தினச்சம்பள தொழிலாளரின் சீவனமும் கஷ்டம் தரும்.

மாணவர் கல்விக்குழப்ப காரணிகள் கல்வி வளர்ச்சியைப் பெரிதும் குறையச் செய்யும். ஆசிரியர் - கல்வி அதிகாரிகள்-மாணவர்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுவதும் கடினம்.

பெண்களுக்கு இந்தமாதத்திலும் ஏமாற்றங்களும் மனக்குழப்பங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். விவாக முயற்சிகளிலும் முன்னேற்றம் பெறுவது கடினம்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 14இர. 15,16, 19பி.ப.
ஏப். 2இர. 3,4பக.6இர.7

துரதிஷ்டநாட்கள்: மார்ச். 14பக. 27,28,29காலை.
ஏப். 1,8பக.9,10



## கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

கடகராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரிய பகவான் 9ல் சுவர்ணமூர்த்தியாக வலம் வருவது நன்மையாகும். தேகசுகம், குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். பொருள் வருமானத்திலும் முன்னேற்றம் ஏற்படும். முன்பு தடை தாமதங்களால் இழுபறிநிலையில் தொடர்ந்து வந்த கருமங்கள் சாதகமாகிச் சித்தியாகும். இராசாங்க அதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். பூமி, வீடு, வாகன வருமானம், விற்றல் வாங்கல் முதலான லாபங்களும் கிடைக்கும். தூரதேச பொருள் வரவு அல்லது தூரதேச யாத்திரை முதலானவையும் சிலருக்கு நிகழலாம்.

குடும்பத்தினருக்கு நல்லுறவு வளரும். குடும்ப வருமானம் கூடும். நண்பர்கள் புத்திரர்கள் முதலானவர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். மணமாகாத பிள்ளைகளுக்கு விவாகசித்தியும் கிட்டும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் பெறும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் எதிர்பார்த்ததைவிடக் கூடியலாபம் பெறுவர். முதலீடுகள் லாபம் தரும்.

உத்தியோகத்தர்களுக்கு வாழ்க்கையில் எதிர்பார்த்த நல்ல முன்னேற்றங்கள் கூடப்பெறுவதற்குச் சாதகமான காலம். பதவி உயர்ச்சிகள் பதவிச்சிறப்புக்கள் பெற்று மனநிறைவு பெறுவர்.

விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல் கூடுவதால் நல்ல வருமானம் பெறுவர். மானியம்-பசளை முதலான உதவிகளும் கிடைக்கும், விவசாயப் பண்ணைகளில் விளைச்சலும் கூடும்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் கிடைக்கும். தொழிலாளர் - வேலைகொள்ளுவோர் மத்தியில் நல்லிணக்கமும் ஏற்படும், தொழில் ஒப்பந்தங்களில் கூடிய லாபம் பெறுவர்.

மாணவர் கல்வி முன்னேற்றம் இந்த மாதமும் சிறப்பாக முன்னேறும். ஆசிரியர்-மாணவர் மத்தியில் அமைதியும் நல்லிணக்கமும் வளரும். சட்டத்துறை மாணவர்கள் சித்தியடைவர்.

பெண்களுக்குச் சுக்கிரன் அஸ்தமனமாவதால் எதிலும் மனக் குழப்பங்களே பெரும்பாலும் ஏற்படும். நாவடக்கம் இவர்களுக்கு நன்மைதரும். விவாகமுயற்சிகள் பெரும்பாலும் கைகூடும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 14பக.17,18,19மு.ப.
ஏப். 4இர.5,6பக.9,10,13ப

துரதிஷ்டநாட்கள்: மார்ச். 14இர.15,16,29பக30,
ஏப். 2இர.3,4பக.11,12,



## சிங்கம்

**மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்**

சிங்கராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பக வான் 8ல் (அட்டமத்தில்) தாம்ரமூர்த்திய ா கப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நன்மை தராது. பொதுவாக இவர்களின் தேகசுகம் குன்றும். பொருள் வருமானத்திலும் பார்க்கச் செலவுகளும் கூடும். எந்தநேரமும் எதையோ பறி கொடுத்தவர் போலத் தடுமாறும் உள்ளத்துடன் வாழ்க்கையை ஓட்டவேண்டி வரும். எடுத்த முயற்சிகளில் தடைதாமதங்கள் ஏற்படுவதால் தன்னம்பிக்கையை இழப்பார்கள். சிலருக்கு இராசாங்கவிரோதம், இராசதண்டனைகள் கூடக் கிடைக்கும். எதிர்பாராத துக்கசம்பவங்கள். பிதிர் வழிக்கருமாதிகள், இடம்பெயர்தல் முதலானவை யும் நிகழக்கூடும். தசாபுத்தி அந்தரபெலமுள்ள வர்கள் அதிகம் பாதிப்புக்குள்ளாக மாட்டார்கள்.

குடும்பத்தில் மனக்கசப்புக்களும் சச்சரவுகளும் அடிக்கடி தோன்றிமறையும். குடும்பவருமானம் வீழ்ச்சியுற்று செலவுகள் அதிகரிப்பதால் கடன் பயமும் ஏற்படும். புத்திரர் உதவிகளும் கிடையாது.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையில் தொடரும். பழைய கடன் நிலுவைகளையும் அற விடமுடியாது. முதலீடுகளின் வருமானம் வீழ்ச்சியுறும். இதனால் வியாபாரம் பாதிப்படையும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். மேலதிகாரிகளின் பழிச்சொல்லால் வருந்துவார்கள், நிதானமும் பொறுமையும் இவர்களுக்குத் தேவை.

விவசாயிகளுக்கு பயிர்ச்சேதம் தொடரும். ஆனால் கணிசமான விளைச்சலும் ஏற்படும். மானியம், பசளை முதலியன கிடைப்பது கடினம். நல்ல சந்தைவாய்ப்புக் கிடைப்பதால் லாபம் கிடையா விட்டாலும் நட்டம் வராது.

தொழிலாளர் வேலைவாய்ப்புக்கள் பெறுவது கடினம். தினச்சம்பளகாரருக்கு அன்றாடச் சீவியத்துக்கும் கஷ்டமே! இரசாயன, இயந்திரத் தொழிலாளர் விபத்துக்குள்ளாகவும் கூடும்.

மாணவர் கல்விமுன்னேற்றம் தடைப்படும். ஆசிரியர் மாணவர் மத்தியில் கருத்துவேறுபாடுகள் வலுவடையும். வெறுப்புணர்ச்சிகளால் மாணவரின் சுயமுயற்சிகளும் தடைப்படும்.

பெண்களுக்கு பல்வேறுகோணங்களில் மனக் கஷ்டங்கள் ஏற்படக்கூடும். விவாக முயற்சிகள் கைகூடுவதுகடினம். குடும்பப்பெண்களுக்குக் குடும் பச்சுமை அதிகரிக்கும்.

அதிஷ்டநாட்கள்:- மார்ச். 14இ, 15, 16, 19பி.ப, 20
ஏப். 6இர, 7, 8, 11, 12, 13அ.கா

துரதிஷ்டநாட்கள்:- மார்ச். 17, 18, 19மு.ப, 31இர
ஏப். 1, 2பக, 4இர, 5, 6ப, 13பக



## கன்னி

**உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2-ம் கால்**

கன்னி இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 7ல் ரஜஸ மூர்த்தியாக வலம் வருவது நன்மைதீமைகலந்த பலன்களையேதரும். தேகசுகம் நன்றாக இருக்கும். எனினும் குடும்பசுகம் இடைக் கிடை குன்றக்கூடும். குருவின் சுபகோசாரசஞ்சாரமும் திருஷ்டியும் இவர்களுக்கு இருப்பதால் நல்லவர்களின் கூட்டுறவு, தொழில்கள் பலிதம், காரிய சித்தி, புத்திரர்வழி உதவிஒத்தாசைகள் முதலானவையும் நிகழச்சாதகமானகாலம். சூரியன் மூர்த்திபலம்பெறுவதால் இராசாங்க அனுகூலம் கிடைக்கும். சுக்கிரன், சனி, செவ்வாய் இவர்களின் பலக்குறைவால் களத்திரம், சகோதரம் முதலான உறவினர் வழித்துன்பங்கள் பொருட்செலவு அலைச்சல் முதலான பலன்களும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் இடைக்கிடை சுகக்குறைவுகள் ஏற்பட்டாலும் நல்லுறவும் அமைதியும் நிலவும். குடும்பவருமானம் சிறப்பாக முன்னேறும். புத்திரர் உறவினர்களின் உதவிஒத்தாசை கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் சிறக்கும். முதலீடுகளின் வருமானம்கூடும். பழைய நிலுவைக்கடன்கள் வந்துசேரும். மொத்த வியாபாரிகள் சிறப்பான லாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்களும் கிடைக்கும். சிலருக்கு பதவி

உயர்வுகள் கிடைக்கும். சகஉத்தியோகத்தர்களின் உதவிஒத்தாசைகளும் கிடைக்கும்,

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் கணிசமாக அதிகரிக்கும். அரசமானியம், பசளை, மருந்து முதலான உதவிகள் கிடைத்தாலும் இயற்கை ஏதுக்களால் பயிர் அழிவுகள் ஏற்படும்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் கிடைக்கும். வேலை கொள்ளுவோருக்கும் தொழிலாளருக்கு மிடையே ஒத்துழைப்பு வளரும். நாட்சம்பளம் பெறுவோரின் வாழ்க்கைத்தரம் உயரும்.

மாணவர் படிப்பில் ஆர்வமும் ஊக்கமும் பெறுவர். மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு ஆசிரியர்கள் கல்விநிறுவனங்கள் நம்பிக்கையூட்டும். பரீட்சைகளில் சிறப்புச்சித்தியும் பெறுவார்கள்.

பெண்களுக்கு எதிர்ப்புக்களுக்கிடையிலும் காரியசித்தி பெறும்வாய்ப்புக்கள் கிட்டும். விவாக முயற்சிகளிலும் வெற்றிபெறுவர். வேலைக்குப் போகும் பெண்களுக்கு சிறப்புக்கள் உண்டு.

அதிஷ்டநாட்கள்:- மார்.14பக,17,18,19மு.ப,22
ஏப்.1,2பக,9,10,13பக

துரதிஷ்டநாட்கள்:- மார்.19பக,20,21
ஏப்:2இர,3,4பக,6இர,7,8.




சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3

துலா இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 6ல் லோகமூர்த்தியாக வலம் வருகிறார். சூரியன் தானபெலம் பெற்றாலும் மூர்த்திபெலம் பெருமையால் நன்மைதீமை கலந்த பலன்களே அதிகம் நிகழும். இவர்களின் தேகசுகம் சீராக இருக்கும். குடும்பசுகம் இடைக்கிடை பாதிக்கச் செய்யும். பொருள் வருமானம் முன்னேற்றம் காணும். எந்த முயற்சிகளிலும் தடைதாமதங்களின் பின்பே சித்தியடைவர். சனி பகவானின் சுப சஞ்சாரம் இவர்களுக்குத் தூர தேசப் பொருள்வரவு, அந்நியர் உதவி முதலியனவைத் தரும். குருவும் செவ்வாயும் அட்டமத்தில் சஞ்சாரம் செய்வதால் விபத்துக்கள் அவமிருத்துக்கள் சத்திரசிகிச்சைப் பயம் முதலானவை நிகழக்கூடும்.

குடும்பத்தில் வருமானம் கூடும். குடும்ப சுகவீனங்களால் செலவுகளும் கூடும். இனசனபந்து மித்திரர்களுடன் பகை விரோதங்களும் ஏற்படும். மங்கள நிகழ்ச்சிகளும் நிகழ்வது சந்தேகமே!

வர்த்தகர்களுக்கு இந்த மாதம் வியாபாரம் மந்தநிலையடையும். பழைய முதலீடுகளில் வருமானம் வீழ்ச்சியுறும். கறுப்புச்சந்தை வியாபாரிகள் பெருநட்டமடைவர்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம் குறைவதால் மேலதிகாரிகளின் கோபத்துள்ளாக வேண்டியும் வரும். வேலைப் பழுவும் கூடும். சிலர் பதவியைவிட்டு விலகினாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்குப் பயிர்ச் செழிப்பும் நல்ல விளைச்சலும் ஏற்படும். விலசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் கூடும். கூலியாட்களின் பூரண ஒத்துழைப்பும் கிடைக்கும்.

தொழிலாளர் வேலைவசதி பெறுவதுடன் முதலாளிகளுடன் ஒத்துழைக்கவும் செய்வர். ஆனால் வேலைக்கேற்ற சம்பளம் பெறுவது கடினம். அன்றாடம் சீவனத்திற்குக் கஷ்டம்வராது.

மாணவர் கல்வி முன்னேற்றத்திற்குத் தடைக்காரணிகள் தோன்றும். மாணவர் ஆசிரியர் மத்தியில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு வளர்ந்து வரும். சுயமுயற்சியுடையவர்கள் சித்திபெறுவர்.

பெண்களுக்குப் பொறுமைக்குச் சோதனையான மாதம். திடீர் உணர்ச்சி வசப்படுதலால் சிக்கல்களில் மாட்டிக்கொள்ளவும் கூடும். விவாக முயற்சிகளும் இழுபறியாக நீளும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 14இர.15,16, 19பி.ப.
ஏப். 2இர.3,4பக.11,12,

துரதிஷ்டநாட்கள்: மார்ச். 14பக.22,23,24மு.ப.
ஏப். 4இர.5,6பக.9,10




விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

விருச்சிக இராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 5ல் தாம்ர மூர்த்தியாகப் பலக்குறைவுடன் வலம் வருவது நன்மைதராது. மேலும்

ஏழரைச்சனியின் கோசார சஞ்சாரம் நிகழுவதும் கவனிக்கப்படவேண்டும். குருபகவான் இராசியைத் திருஷ்டி செய்வது நன்மைதரும். தேகசுகம் குடும்பசுகம் என்பன பொதுவாகச் சீராக இருக்கும். பொருள் வருமானமும் திருப்திதரும். வீட்டில் அல்லது நெருங்கிய உறவினருக்குள் மங்கள கொண்டாட்டங்களும் நிகழலாம். பிதாவழிக் கருமாதி முதலான சம்பவங்களும் இடைக்கிடை கலந்து நிகழலாம்.

குடும்பத்தவர்களுக்குச் சிற்சில பிரச்சினைகள் அவ்வப்போது தோன்றினாலும் பொதுவாக நல்ல முறையில் சமாளித்துக் கொள்ளுவார்கள். பெரியவர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். சகோதரங்களுக் கிடையில் சிலசமயம் பாகப்பிரிவினைகள் சம்பந்தமான பிணக்குகளும் ஏற்படக் கூடும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் காணும். நிதி வசதிகளும் உண்டு. ஆனால் கடன் நிலுவைகளை அறவிடுவது சிரமம்தரும். முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடைப்பதும் கடினம்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் தொல்லைகள் அதிகரிக்கும். எவ்வளவு தான் பொறுப்புடன் வேலைசெய்தாலும் குற்றம் கண்டு கொள்வார்கள்.

விவசாயிகளுக்கு பயிர்ச் செழிப்பும் விளைச்சலும் கணிசமாகக் கூடினாலும் உற்பத்திச் செலவுகள் கூடுவதால் எதிர்பார்த்த லாபம் கிடையாது. பண்ணைகளில் நட்டம் ஏற்படமாட்டாது.

தொழிலாளர் மத்தியில் கருத்து வேறுபாடுகள் அவ்வப்போது தோன்றி மறையும். வேலை வசதிகளும் பெறுவர். நாளந்த சம்பளம் பெறுபவர்களுக்கு சீவனத்துக்குப் போதிய வருமானம் கிடைக்கும்.

மாணவர் கல்வி முன்னேற்றத்திற்கு கல்வி அதிகாரிகளால் முட்டுக்கட்டைகள் (பெரும்பாலும்) போடப்படும். எனினும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

பெண்களுக்கு இந்த மாதம் மனநிறைவான சம்பவங்கள் நிகழும். விவாகாதி சுபமங்கள கொண்டாட்டங்களும் நிகழும். கணவன்மாரின் அன்பும் அரவணைப்பும் பெண்களுக்கு கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: மார்ச். 17,18,19மு.ப.22,23.
ஏப். 1,2,பக.4இர.5,6பகல்.

துரதிஷ்டநாட்கள்: மார்ச்: 14இர.15,16,24பி:ப.
ஏப். 6இர7, 8,11,12,13கா.



# தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

இந்த இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 4ல் சுவர்ணமூர்த்தியாக வலம்வருகின்றார். சூரியன் மூர்த்திபலம் பெறுவதால் நற்பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியும். பொதுவாக இவர்களின் தேகசுகம் சீராக இருக்கும். குடும்ப சுகமும் திருப்திதரும், குடும்ப வருமானத்திலும் முன்னேற்றம் ஏற்படும். இராசாங்க அனுகூலம் அல்லது இராசாங்க உதவிகளும் பெறுவர். முன்பு இழுபறிநிலையில் இருந்த காரியங்களிலும் அனுகூலமான சித்தியும்பெறுவர். எனினும் சனியின் துர்க்கோசாரசஞ்சாரமும், வியாழனின் துர்க்கோசாரசஞ்சாரமும் சேருவது இவர்களின் முன்னேற்றத்தைக் கெடுக்க ஏதுவாகும். தசாபுத்தி அந்தரபலம் பெற்றவர்கள் அதிகம் பாதிக்கப்படமாட்டார்கள். முக்கியமாகச் சனிதசை சனிபுத்தி நிகழுபவர்களுக்குக் கடினகஷ்டகாலமாக அமையலாம், தெய்வபக்தி வழிபாடும் இவர்களுக்குச் சாந்திதரும்.

குடும்பத்தில் கணவன் மனைவியருக்கிடையில் சிறுசிறு சச்சரவுகள் ஏற்படக்கூடும். குடும்ப வருமானத்திலும் பார்க்க செலவுகள் அதிகரிக்கும். புத்திரர், உறவினர் உதவி கிடைப்பது கடினம்.

வர்த்தகர்களுக்குப் புதன் நீசபங்கமாகிப்பலம் பெறுவதால் முதலீடுகளில் லாபம் வரத்தொடங்கும். நிதிவசதிகளும் குறைவுறும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நன்மைதரும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்திபலத்துடன் புதனுடன் சேர்ந்து இராசயோக வலிமைபெறுவதால் மேலதிகாரிகளின் பராட்டுக்களையும் பதவிச்சிறப்புக்களையும் எதிர்பார்க்கலாம்.

விவசாயிகளுக்கு இயற்கை செயற்கை ஏதுக்கலால் பயிரழிவுகள் உண்டாகும். விளைச்சலும் குன்றும். குத்தகை விவசாயிகள் கடன்பட்டு முதலீடு செய்வதை குறைப்பது நன்மைதரும்.

தொழிற்பிணக்குகள் வலுவடைவதால்தொழிலாளரின் வருமானம் குன்றும். நாட்சம்பளம் பெறுவோருக்கு அன்றாடசீவனத்துக்கே வருமானம் போதாது. ஒப்பந்தத்தொழில்கள் நட்டம்தரும்.

மாணவர் கல்வி வளர்ச்சி தொடரும். ஆசிரியர் மாணவர் மத்தியில் நல்லிணக்கம் உண்டாகும். சிறப்பாகக் கணித விஞ்ஞானத்துறை மாணவர்கள் சிறப்புச் சித்திகள் பெறுவர்.

பெண்களுக்கு காரியத்தடைகள் ஏற்படுதலால் மனக்குழப்பங்கள் ஏற்படும். விவாகாதி முயற்சிகளும் இழுபறியாகவே தொடரும். உத்தியோகப் பெண்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு.

அதிஷ்டநாட்கள்:- மார்.19பி.ப,20,21,24பி.ப
ஏப்.2இர,3,4பக,6இர,7,8

துரதிஷ்டநாட்கள்:- மார்.14பக,17,18,19மு.ப,27
ஏப்.9,10,13பக.




**உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

மகர இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 3ல் ரஜஸ மூர்த்தியாகப் பலம்பெறுவது நன்மையாகும். மேலும் வியாழபகவான் திரிகோணத்தில் சுபகோசாரசஞ்சாரத்துடன் இந்த இராசியைத் திருஷ்டிசெய்வதும் நற்பலன்களுக்குச் சாதகமாகும். பொதுவாக இவர்களின் உடல்நலம், குடும்பநலம், என்பன சீராக இருக்கும். முன்பு தடைதாமதங்களுக்குள்ளாகி இழுபறியாக இருந்து வந்த காரியங்களில் வெற்றிபெறுவர். பொருள் வருமானமும் கூடும். சிலருக்கு வீடு வாகன வசதிகள் கூடக்கிடைக்கும். இனசன பந்துக்களின் கொண்டாட்டங்களும் நிகழும். எவ்வாறுயினும் இவர்களுக்கு ஏழரைச்சனியின் காலமும் சேருவதால் அலைச்சல் பொருள்சேதம், காரியத்தடை பிணிபீடைகள் முதலான கெட்ட பலன்களும் இடைக்கிடை கலந்து நிகழும்.

குடும்பத்தில் கணவன் மனைவியரின் நல்லுறவு வளரும். குடும்பவருமானமும் கூடும். குடும்பப் பெரியவர்களின் நல்லெண்ணமும் ஆசியும் பெறுவர். புத்திரர் உதவிகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேறத் தொடங்கும். வாடிக்கையாளரின் ஆதரவும் வளரும். மொத்தவியாபாரிகள் அதிகலாபம் பெறுவர். புதுமுதலீடுகளும் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம்பெறுவதால் மேலதிகாரிகளின் பராட்டுக்கள் கிட்டும். சிலர் பதவியுயர்வும் பெறுவர். உடன் உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். அரசமானியம், பசளைகள், மருந்து வகைகள் கிடைத்துப் பயிர்ப்பாதுகாப்புச் செய்தலால் கணிசமான விளைச்சல் பெறுவர்.

தொழிலாளருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைப்பதால் சீவனத்துக்கு கஷ்டமின்றி வாழ்வர். தினச்சம்பளம் பெறுவோர் நல்லவருமானம் பெறுவர். இயந்திரம் ஆபரணத்தொழில் செய்வோர் வருமானம் கூடும்.

மாணவர் கல்வி ஊக்கம் பெறுவர். ஆசிரியர் மாணவர் மத்தியில் நல்லுறவு வளரும். கணித விஞ்ஞானத்துறை மாணவர் சிறப்பாகக் கல்வித் தேர்ச்சியும் பெறுவர்.

பெண்களுக்கு விருப்பமானவற்றைப் பெற இந்தமாதத்தில் வழிபிறக்கும். குடும்ப பெண்களுக்கு பந்துசனக்கொண்டாட்டங்களும் மங்கள கொண்டாட்டங்களும் வீட்டில் நிகழும்.

அதிஷ்டநாட்கள்:- மார்.14பக,22,23,24மு.ப,27
ஏப்.1,2பக,4இர,5,6பக,9,10

துரதிஷ்டநாட்கள்:- மார்.14இர,15,16,19பி.ப 29
ஏப்.11,12,13அ,கா.




**அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3ம் கால்**

கும்பராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 2ல் லோகமூர்த்தியாகிப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நன்மைதராது. பொதுவாக இவர்களின் தேகநலம் குடும்பநலம் என்பன இடைக்கிடை பாதிப்புறும். இராசி அதிபன் சனிபகவான் லாபத்தில் இருந்து திருஷ்டி செய்வதால் பொருள் வருமானம் கணிசமாகக் கூடும். முக்கியமாக அந்நியதேசப் பொருள் வந்து சேரும். புதனும் சுக்கிரனும் பலம் பெறுவதால் விற்றல் வாங்கல்மூலம் லாபங்கள் கடல்கடந்த தேசப்பொருள் வரவு, பந்துமித்திரர் உதவி ஒத்தாசைகள், பெண்களால் உதவிகளும் காரியசித்தியும் பெறுதல் முதலானவையும் நிகழும்.

சூரியன், செவ்வாய், குரு இவர்களின் பலக்குறை வால் இராசாங்கவிரோதம், இராசதண்டனை முதலான கெட்டபலன்களும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் பிணிபீடைகளும் கருத்துமோதல்களும் அடிக்கடிதோன்றி மறையும். குடும்பத்தில் ஏற்படும் திடீர்நெருக்கடிகளால் குடும்பச்செலவுகளும் அதிகரிக்கும். அந்நியர் உதவி கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்புடன் முன்னேற்றம் காணும். நிதிக்கையிருப்பு திருப்தி தரும். வாடிக்கையாளரின் வருகையும் அதிகரிக்கும், முதலீடுகளின் வருமானம் கூடும்.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பொறுப்புக்கள் அதிகரிக்கும். எவ்வளவுதான் உண்மையாக உழைத்தாலும் மேலதிகாரிகளை திருப்திப்படுத்த முடியாமல் திண்டாட வேண்டியும் நேரும்.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் அதிகரிக்கும். விவசாயப்பண்ணைகளிலும் விளைச்சல பெருக்கத்தால் வருமானம்கூடும். விளைவுகளுக்கு நல்ல சந்தைவாய்ப்பு கிடைப்பதால் லாபம் கூடும்.

தொழிலாளருக்கு இந்தமாதமும் வேலைவசதிகள் கிடைக்கும். ஆலைத்தொழிலாளர், இயந்திரப் பொறி சம்பந்தப்பட்ட தொழில் செய்வோர் நல்ல லாபம் பெறுவர்.

மாணவர் கல்வியில் ஊக்கம் காட்டுவார்கள் ஆசிரியர் மாணவர் மத்தியில் நல்லுறவு வளரத் தொடங்கும். கணித விஞ்ஞானத்துறை மாணவர் சிறப்புச் சித்திகளும் பெறுவர்.

பெண்களுக்கு கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் சற்று மனநிறைவுகளைக் கொடுக்கும். குடும்பப் பெண்களுக்கு கணவன்மார்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்:- மார்.14இ,15,16,24பி.ப,25
ஏப்.2இர,3,4பக,6இர,7,8
துரதிஷ்டநாட்கள்:- மார்.17,18,19மு.ப,22,23
ஏப்.1,2பக,13பக.




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியில் சென்னமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 1ல் (சென்மத்தில்) தாம்ர மூர்த்தியாகப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்கின்றார். இராசி அதிபன் வியாழபகவான் குரூர கோசாரசஞ்சாரம் செய்வதும் இங்கு கவனிக்கப்பட வேண்டும். பொதுவாக இவர்களின் உடல் நலம் பெரிதும் பாதிப்புறும். சிலருக்குச் சத்திர சிகிச்சை கூட இடம்பெறக்கூடும். பொருள் வருமானமும் வீழ்ச்சியுறும். எந்த முயற்சிகளிலும் அலைச்சல் ஏமாற்றம் தடைதாமதங்கள் வீண் செலவுகள் ஏற்படுதலால் இவர்கள் சித்தப்பிரமை பிடித்தவர்கள் போலவும் காணப்படுவார்கள். தசாபுக்தி அந்தரபலமில்லாதவர்கள் தெய்வபக்தி வழிபாடுகளால் சாந்திபெறமுடியும்.

குடும்பத்தவர்களுக்குப் பற்பல பிரச்சனைகள் அவ்வப்போது தோன்றும். மனைவி மக்களின் சுகவீனங்கள் முதலியவற்றால் குடும்பத்தில் அமைதிக் குறைவும் ஏற்படும். வருமானம் வீழ்ச்சியுறும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை அடையும். நிதி இருப்புக்களிலும் பற்றாக்குறைவு ஏற்படும். வாடிக்கையாளருடன் விரோதிக்க வேண்டியும் நேரும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் தொல்லைகள் அதிகரிக்கும். வேலைப்பழு கூடிக் கொண்டே போகும். சிலர் கட்டாய லீவு மூலமோ அல்லது நீக்கப்பட்டோ பதவி இழப்பர்.

விவசாயிகளுக்கு பயிர் அழிவு ஏற்பட்டாலும் கணிசமான உற்பத்திப்பெருக்கமும் ஏற்படுதலால் நட்டம் வராது. விவசாயப்பண்ணைகளிலும் எதிர் பார்க்கும் லாபம் கிடையாது.

தொழிலாளர் வேலைகொள்ளுவோர் மத்தியில் ஓரளவு நல்லிணக்கம் ஏற்படும். பொதுவாக இவர்களின் சீவனத்துக்குப் போதிய வருமானத்துக்கு வேலைவாய்ப்பும் பெறுவர்.

மாணவர் கல்வித்தடைகள் தொடரும். மாணவர் மத்தியில் ஏமாற்றமும் விரக்தியும் ஏற்படுதலால் கல்வி வளர்ச்சியும் தடைப்படும். ஆசிரியர் மாணவர் உறவுகளிலும் விரிசல் ஏற்படும்.

பெண்கள் இந்தமாதமும் எதிர்பார்ப்புக்களைப் பெறுவது கடினம். விவாகமுயற்சிகள் பெரும்பாலும் தோல்விகளைத் தழுவினாலும் ஆச்சரியமில்லை. குடும்பப்பெண்களுக்கு ஏற்படும் திடீர்நெருக்கடிகளை சமாளிப்பது சிரமம்.

அதிஷ்டநாட்கள்:- மார்.14பக,17,18,19மு.ப,27
ஏப்.1,2பக,4இர,5,6பக,9,10
துரதிஷ்டநாட்கள்:- மார்.19பி.ப,20,21,24பி.ப,25
ஏப்.2இர,3,4பக.

# அதிஷ்ட எண் ஞானம்

— இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். —

(முன்தொடர்ச்சி)

## தொடர் 12

ஒரு மனிதனின் வெளிப்படையான இயல்பு, விருப்பு, வெறுப்பு, குணஇயல்புகள் திறமை என்பனவற்றை அவனது பிறப்பெண்ணும், உள்ளடக்கமான குணதிசையங்களையும் வாழ்க்கையின் சம்பவங்கள், போக்கு முடிவு என்பவற்றை அவனது கூட்டெண்ணும், காட்டி நின்றாலும், அவன் பிறந்த மாதப்பகுதி, நேரப்பகுதி என்பவற்றின் ஆதிக்கமும் சேர்ந்தே அவனது மொத்தப்பலனை நிர்ணயிப்பதோடு இவையெல்லாவற்றையும் இயங்க வைக்கும் மகத்தான பங்கை அவனது பெயரெண்ணே செய்கிறது.

பெயரமைக்கும்போது அப்பெயரின் 5 அம்சங்களான பெயரின் முதலெழுத்து, இனிசலோடு சேர்ந்த பெயரெண் செல்லப்பெயரெண் பெயரில் முதன்மைபெறும் எழுத்துக்களும் அவற்றின் நிலையும், என்பனவற்றை நாம் கவனிக்க வேண்டும். பெயரை எப்படி அமைப்பதென்று இப்பொழுது பார்ப்போம். எண்களில் 1,3,5,6,9 என்பன சுப எண்கள் என்றும், 2,4,7,8 என்பன அசுப எண்கள் என்றும் சொல்லப்படும். எண்கள் 9,2 விதிவிலக்கானவையாக மாறி அமைகின்றன. அசுப எண்களான 2,4,7,8 என்பன இனிசலோடு சேர்ந்த பெயரெண்ணாகவோ, தனிப்பெயரெண்ணாகவோ அன்றி செல்லப்பெயரெண்ணாகத்தானும் வராதபடி நாம் பெயரமைக்க வேண்டும். அடுத்து சாதாரணவிதிப்படி ஒருவரது பிறந்த திகதி எண்ணிலோ அல்லது கூட்டெண்ணிலோ பெயர் வைக்க வேண்டும். அல்லது அவற்றின் நட்பு எண்ணில் பெயர் வைக்கலாம். பிறப்பெண் சுபஎண்ணாகவும், கூட்டெண்ணுக்குப் பகை இல்லாமலும் அவர் பிறந்த மாதப்பகுதியைப் பொறுத்து அப்பிறப்பெண்ணுக்குரிய கிரகம் அம்மாதத்தில் நீசமோ, வக்கிரமோ அடையாமலும், அவரது உயிர்ப்புச்சக்தியை ஆதிக்கம் செலுத்துவதாகவும் இருந்தால் பிறப்பெண்ணான அச்சுப எண்ணிலேயே பெரெண் அதாவது இனிசலோடு சேர்ந்த பெயரெண் அமைக்கப்பட வேண்டும். மேற்சொன்ன விபரங்களை ஒருவரது சாதகத்திலிருந்து சுகமாகவும், இலகுவாகவும் அறியலாம் என்பதைக் கவனிக்கவும். பிறப்பெண், கூட்டெண்ணுக்கு பகையெண்ணாக இருப்பின் அவை இரண்டிற்கும் ஒத்துப்போகக் கூடிய ஒரு நட்பு எண்ணில் பெயரமைக்கலாம். அந்த எண்ணுக்குரிய கிரகஆதிக்கம் இவரில் உண்டா? என்பதை நிட்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். பலமற்ற அல்லது நீசம், வக்கிரம் ஆனகிரக எண்களில் பெயரமைந்தால் பயன்பெற முடியாது. பெயரெண்ணுக்குரியகிரகம் ஆட்சி, உச்சம் அல்லது நட்பாகவாவது இருப்பதோடு மனிதன் பிரகாச நிலையடையும் பருவமான 18ற்கும் - 36வயதிற்கும் இடைப்பட்ட பகுதியில் அக்கிரகத்தின் திசாபுத்தி நடக்குமானால் அது சிறப்பம்சமாகும். பிறப்பெண் அசுப எண்ணாகவும், கூட்டெண் சுபஎண்ணாகவும் இருப்பின் கூட்டெண்ணில் முழுப்பெயரெண் அமையலாம். ஆனால் அது முன்னர் விளக்கியது போல் பிறப்பெண்ணுக்கு பகையில்லாமலும், அவ்வெண்ணுக்குரிய கிரகம் அச்சாதகங்களுக்குப் பலம்பொருந்தியதாகவும் இருத்தல் அவசியம். கூட்டெண்ணும் அசுபஎண்ணானால் அவர் பிறந்த காலப்பகுதியின் ஆதிக்க எண்ணைப்பார்த்து பிறந்தவாரம், நேரத்தையும் அனுசரித்து அவ்வெண்ணின் பெயரமைக்கலாம். அங்கும் அவ்வெண் பிறப்பெண்ணுக்கும் நட்புஆகவும் பகை இல்லாமலும இருப்பதை நிட்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வெண் கிரகம் ஜாதகத்தில் பலமாக இருப்பது அவசியம்.

இப்படி ஒரு பெயரெண்ணைத் தெரிவு செய்தபின் குறிப்பாக என்ன எண்ணில் பெயர் அமைக்க வேண்டுமென்று பின்னர் பார்க்க வேண்டும். உதாரணமாக 1ம் எண்ணில் பெயர் வைக்கத் தீர்மானித்தபின் 10,19,28,37,46 என்று இப்படி 1ம் எண்வரும் எண்களில் எந்த எண்ணை எடுக்க வேண்டுமென்று பார்க்க வேண்டும். இதில் 28ம் எண்ணில் பெயரமைக்கக்கூடாது. எண் 37 வியாழ அம்சமும், கேது அம்சமும் சேர்ந்தது. எண் 46

இராகு அம்சமும், வெள்ளி அம்சமும் சேர்ந்ததாகும். இப்படியே ஏனையவையும் அமைகின்றன. எனவே இவருக்கு என்னென்ன கிரகாதிக்கத்தோடு, அம்சத்தோடு அமைவது நல்லதென்று பார்த்து அவ்வெண்ணைத் தெரிவு செய்ய வேண்டும்.

இன்னும் இவர் பிற்காலத்தில் என்ன தொழிலில் பிரகாசிப்பார் என்பன போன்ற விடயங்களையும் கூடப்பார்த்து நுட்பமாக அவ்வெண்ணைத் தெரிவு செய்யலாம். இப்படி அமைக்கும் பெயரில் வரும்/தனிப்பெயரெண்ணோ, செல்லப்பெயரெண்ணோ அசுபஎண்ணில் அமையாமலும்/அவையும் நற்கிரகாதிக்கத்தோடு ஒத்துப்போகின் சிறப்பாகும். இவ்வாறு புதிதாகப் பெயரமைப்பதைவிட இருக்கும் பெயரை மாற்றுவதில் நாம் வேறுபட்டபல விசயங்களை கவனிக்கவேண்டியுள்ளது. பெயரை மாற்றி அமைப்பதைப்பற்றி அடுத்த பேச்சில் பார்ப்போம்.

## தொடர் 13

குழந்தைக்கு புதிதாகப் பெயரமைக்கும் போது நாம் கவனிக்கவேண்டிய பவவிஷயங்களையும், நுட்பங்களையும் சென்றமுறை விளக்கினேன். இன்று ஏற்கனவே ஒருபெயரைப் பாவனையில் வைத்திருப்போர், அவசியமானுல் அப்பெயரை மாற்றுவதுபற்றிக் கவனிப்போம். பெயரமைக்கும் பகுதியைவிட பெயரை மாற்றும் பகுதியே மிகவும் கவனமாகக் கையாளப்பட வேண்டியதொன்ருகும்.

ஒரு விதையை நேரடியாக ஊன்றி முளைக்கும் பயிரின் பராமரிப்பைவிட ஒரு நாற்றை நட்டு வளர்க்கும், பயிரின் பராமரிப்பு மிகவும் சிக்கலானது என்பதை நீங்கள் உணர்வீர்கள். பெயரை மாற்றும்போது பெயரை அமைப்பதற்கு கவனத்தில் எடுத்துக்கொண்ட விசயங்களோடு, நாம் கவனத்தில் எடுக்கவேண்டிய ஏனைய விஷயங்களாவன:-

1. பெயரை மாற்றுபவரின் வயது
2. அவரது குடும்பநிலை
3. அவரது தொழில்
4. அவரது குடும்ப அங்கத்தவர், நண்பர், பங்குதாரர் போன்ருேரின் ஆதிக்க எண்கள்.
5. அவரது அப்போதைய அபிலாசைகள் என்பனவாகும்.

முதலாவது குறிப்பிட்ட வயது என்பதை எடுத்துக் கொண்டால்

18 வயதிற்குக் குறைந்தோர்
18 வயதிற்கும் - 36 வயதிற்க்கும் இடைப்பட்டோர்
36 வயதிற்கும் - 54 வயதிற்கும் உட்பட்டோர்
54 வயதிற்கு மேற்பட்டோர்.

என்று 4 பிரிவாகப் பிரிக்கலாம்.

18 வயதிற்கு உட்பட்டோர் வாழ்க்கையின் எப்பகுதியிலும் வேருன்ருதபடியினுல் அவர்களது கல்வி அல்லது தொழிற்பயிற்சியை மட்டும் கருத்திற்கொண்டு அவற்றை பாதிக்காதபடி புதிதாகப் பெயரை அமைப்பதைப்போல மாற்றி அமைத்துக் கொள்ளலாம். 54 வயதிற்கு மேற்பட்டவர்கள் பெயரை மாற்றி நன்மைபெற முடியாதென்பதோடு வேண்டாத பல தொல்லைகளையும் விலைக்கு வாங்க நேரிடும். எனவே 54 வயதிற்கு மேற்பட்டோர் பெயரை மாற்றக் கூடாதென்பதே எமது ஆலோசனையாகும். 36 வயதிற்கும் - 54 வயதிற்கும் இடைப்பட்டோர் பெயரை மாற்றும்போது அது இதுவரை இருந்த பெயரெண்ணின் அதிர்வுக்கு அதிக வித்தியாசம் இல்லாமல் அதாவது அதன் நட்பு எண்களில் அமைத்தல் சிறப்பாகும். அத்தோடு புதிய பெயரெண்ணின் அதிர்வு ஆதிக்கத்தைப் பெற மிகக்கூடிய பிரையாஸை அதாவது பயிற்சியும் எடுக்க வேண்டிவரும். 18 வயதிற்கும் - 36 வயதிற்கும் இடைப்பட்டோர் கவனிக்க வேண்டிய எல்லாவிடயங்களையும் 36ற்கும் - 54ற்கும் இடைப்பட்டோரும் அனுசரிக்க வேண்டும். 18 வயதிற்கும் - 36 வயதிற்கும் இடைப்பட்டோர் பெயர் மாற்றும் போது கவனத்தில் எடுக்க வேண்டியவற்றை இப்பொழுது காண்போம்.

இவ்வயதினர் வாழ்க்கைத்தொழிலை ஆரம்பித்திருப்பர், அல்லது ஆரம்பிக்க இருப்பர். வாழ்க்கையில் முக்கியமான நண்பர்கள், பங்காளிகள் வேறுசிலரின் தொடர்பு ஏற்பட்டிருக்கும்; அடுத்து மணவாழ்க்கையில் ஈடுபட்டிருக்கலாம். அல்லது ஈடுபடக்காத்திருக்கலாம். குழந்தைகளும் சுற்றத்தவரும் இருப்பின் அவர்கள் பிரதான இடத்தை வகுப்பர். இன்னும் அவர் செய்த செய்கின்ற தொழில் உணவு என்பவற்றைப் பொறுத்து அவரது உடல் ஒரு குறிப்பிட்ட தன்மையில் அதாவது கெட்டியாகவோ மென்மையாகவோ இருக்கும். ஒரு விவசாயியின் உடல் ஒரு தொழிலாளியின் உடல் ஒரு டாக்டரின் உடல் இவை எல்லாம் தன்மையில் வேறுபட்டிருக்கும் அல்லவா? இவை எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டு தான் நாம் பெயரை மாற்றவேண்டும்.

# சனி மகரராசிக்கு மாறுவது எப்போது?

இ. சந்திரகுமார், வசாவிளான்.

சந்: சில ராசிப்பலன் புத்தகங்களில் 12-8-90-ல் சனி தனுவை விட்டு விலகும் என்று கூறப்பட்டுள்ளது. தாங்களோ விருச்சிக ராசிக்கு 1990 மார்ச் மாதம் ஏழரைச்சனி நீங்கும் எனக் கூறியுள்ளீர்கள். இதில் எது சரி? மிருகசீரிடம் 2-ம் பாதக்காரனாகிய எனக்கு அட்டமத்துச்சனி எப்போ நீங்கும்?

நிவி: 1990 மார்ச் 20-ந்திகதியே சனி தனுவை விட்டு விலகி மகரராசிக்கு மாற்றமடையும். பால ஜோதிடம், மாதஜோதிடம், வெளிநாடுகளிலிருந்து வெளிவரும் எபமெரிஸ், சிங்களப்பஞ்சாங்கங்கள் எல்லாவற்றிற்கும் 1990 மார்ச்சிலேயே சனிமாற்றம் நிகழ்கிறது. இதுதவிர சனியின் நிலை பற்றி வானியற்காட்சி மூலமும் முன்னைய சோதிட மலரொன்றில் ஆதாரப்படுத்தியிருந்தோம். அதை வாசிக்க முடியாமற் போனது உங்கள் துரதிஷ்டமே. எனவே 12-8-90-ல் சனிமாற்றம் என்பது பிழையானதாகும். தங்கட்கு 20-3-90-ல் அட்டமத்துச்சனி நீங்கும்.

## சந்தேக நிவிர்த்தி

க. செல்வகுமார், பருத்தித்துறை.

சந்: தங்கள் சோதிடமலரில் "நாள் எப்படி" என்ற விடயத்தில் தினசரி ராகுகாலம் குறிப்பிடப்படுகின்றது. இது சரியாக 1½மணித்தியாலம் தானே வரவேண்டும்? ஆனால் தாங்கள் சிலநாட்களில் 1½மணித்தியாலத்திற்குக் குறைவாகவும், சில நாட்களில் 1½ மணித்தியாலத்திற்குக் கூடவாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

நிவி: ராகுகாலம் 1½மணித்தியாலம் என்பது பகலும் இரவும் சமமான தினத்துக்கு மட்டுமே! பகலின் அளவு (அஹஸ்) சிலநாட்களில் இரவிலும் பார்க்க அதிகமாகவும், சில நாட்களில் இரவிலும் பார்க்கக் குறைவாகவும் அமையும். எனவே பகலின் அளவு கூடுதலான தினத்தில் ராகுகாலம் 1½மணியைவிட அதிகமாகவும், பகலின் அளவு குறைவான தினத்தில் 1½மணியை விடக்குறைவாகவும் பகலின் அளவிற்கேற்ப வீதப்படி அமையும்.

செல்வி A.C. புஷ்பம், வசாவிளான்.

சந்: அஸ்தங்கம் என்பதன் சரியான கருத்து என்ன? பயனே இல்லையா?

நிவி: ஒரு கிரகம் ஒரு குறிப்பிட்ட தூரத்தில் சூரியனை அண்மிக்கும்போது சூரிய ஒளியில் அக்கிரகம் மறைந்து விடுவதால் பூமியிலுள்ளவர்கட்கு அக்கிரகம் கண்ணுக்குத் தெரியமாட்டாது கிரகம் தெரியாமல் இருப்பதனால் அஸ்தமனமடைந்து விட்டது என்று சொல்லப்படுகின்றது. உதாரணமாக சுக்கிரன் சூரியனுக்கு 8 பாகை தூரத்தில் வரும்போது அஸ்தமனமடையும். இவ்வாறு ஒவ்வொரு கிரகங்கட்கும் தூரவித்தியாசம் வேறுபடும். எனவே ஒரு கிரகம் அஸ்தமனமாக இருந்தால் ஜாதகத்தில் அந்தக் கிரகத்துக்குரிய பலாபலன்கள் குறைவுபடும்.

இராசசேகரம் ஆசிரியர், வசாவிளான்.

சந்: திருக்கணித பஞ்சாங்கத்தில் வக்கிரகதிக்கு விளக்கம் கொடுக்கும்போது இத்தோற்றம் சூரியனைச்சுற்றிக் கிரகம் செல்லும் காலத்திலும் பூமி செல்லும்கதி கூடியிருப்பதனால் ஏற்படுகின்றது எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறெனில் எல்லாக் கிரகங்களும் ஒரே நேரத்தில் அல்லவா வக்கிரமடையவேண்டும். அதாவது பூமியின் கதி கூடும்போது மற்றைய எல்லாக் கிரகங்களின் கதியும் குறையத்தானே வேண்டும்? விளக்கம்தரவும்.

நிவி: கிரகங்களெல்லாம் சூரியனை வலம் வந்து கொண்டிருக்கின்றன. பூமியும் அவ்வாறே வலம் வருகின்றது. எனவே பூமியும் ஒரு கிரகமே! நாம் பூமியில் வசிப்பதனால் அதனை ஒரு கிரகமாகக் கருதவில்லை. கிரகங்கள் எல்லாம் ஒரே வேகத்தில் சுற்றவில்லை. சில கிரகங்கள் கூடியவேகத்திலும் சில கிரகங்கள் குறைந்த வேகத்திலும் நகருகின்றன. ஆகவே எல்லாக் கிரகங்களும் ஒரு இடத்தில் நிற்கமுடியாது. வெவ்வேறு கதியில் சஞ்சரித்துக்கொண்டிருப்பதனால் எல்லாக் கிரகங்களும் ஒரு நேரத்தில் வக்கிரமடைய முடியாது. ஒரு கிரகத்தைப் பூமி தாண்டிச் செல்லும்போது அக்கிரகம் மட்டும் வக்கிரமடைவதுபோல் தோற்றும். இவ்வாறே ஏனைய கிரகங்களுக்கும் ஏற்படும்.

## வாசகர் கருத்துக்கள்

# கிரகணம் நிரூபித்துவிட்டது

ஆசிரியர் அவர்கட்கு,

பஞ்சாங்கங்கள் இரண்டு எமது நாட்டில் வெளிவருகின்றன. ஒன்று திருக்கணிதபஞ்சாங்கம் மற்றது வாக்கியபஞ்சாங்கம். இருபஞ்சாங்கங்களிலும் திதிமுதலியனவற்றிலும் விரதங்கள், விழாக்கள் என்பவற்றிலும் மாறுபாடுகள் அடிக்கடி ஏற்படுவது கண்கூடு: இதனால் எப்பஞ்சாங்கத்தை கையாள்வது எனப்பலகாலமாக சிந்தித்து வந்தோம்.

*1971*-ம் ஆண்டில் ஓர் எண்ணம் தோன்றியது. நேரில் கண்டவைகளே உண்மையானவை; ''சோதிடம் பொய்த்தால் வானத்தைப்பார்'' என்பது முதுமொழி. எனவே அப்படி நேரில் காணக்கூடியவை சூரிய, சந்திரகிரகணங்களாகும். அவ்வாண்டு முதல் இவற்றைப் பார்த்து வந்தேன். திருக்கணித பஞ்சாங்கப்படி கிரகணங்கள் சரிவரத் தோற்றுவதையும், வாக்கியபஞ்சாங்கப் படி மாறுபாடாக இருப்பதையும் காலாகாலமாக அறிந்து வந்துள்ளேன். ஒவ்வோர் ஆண்டிலும் கிரகணங்களைக் கவனிக்கத் தவறுவதில்லை.

கடந்த 20-2-89-ல் நிகழ்ந்த பூரண சந்திர கிரகணத்தை நானும், இன்னும் சிலருமாகக் கூடி அவதானித்தோம். ஸ்பரிசத்தை (ஆரம்பம்) எம்மால் சரிவர அவதானிக்க முடியவில்லை. ஏனைய பூரணாரம்பம், மத்யம், பூரணமுடிவு என்பன திருக்கணித பஞ்சாங்கப்படி சரிவர நிகழ்ந்ததைக் கண்டு மகிழ்வடைந்தோம். வாக்கியபஞ்சாங்கப் படி இதற்கான நேரங்கள் 8 நிமிடங்கள் வரையில் குறைவாகக் குறிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு முன்பு (திருக்கணிதப்படி) சரிவர கிரகணம் நிகழ்ந்துவிட்டது.

எனவே இவ்வாறு சரிவரக் கணிக்கப்படும் திருக்கணித பஞ்சாங்கமே நடைமுறைக்கு ஏற்றது என்பது அறிஞர்களின் முடிபாகும். இப்பஞ்சாங்கம் இடையூறின்றி மேலும் வளர்ச்சியடைந்து தமிழ்சமுதாயத்துக்கு மட்டுமன்றி, பிறருக்கும் பயன்பட உமைபாகனை வேண்டுகின்றோம்.

நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில்.

இங்ஙனம்
தி. இராசையா.

## சோதிடம் நம்பிக்கையை ஊட்டுகிறது

ஆசிரியர் அவர்கட்கு,

சோதிடமலர் வெளியிடப்பட்ட காலம் தொடக்கம், மலரை ஒவ்வொரு மாசமும் தவறுமல் வாங்கிப் படிப்பவர்களுள் நானும் ஒருவன். ஏனெனில் இதையும் ஒருவித (சோதிட) ஞான மாகவே கருதுகிறேன். மேலும் நீங்கள் மலரில் தற்போது ஆய்வுமன்றக் கேள்விபதிலோடு சந்தேக நிவிர்த்தியையும் பிரசுரிக்கிறபடியால் இச்சோதிட மலர் எனதும் வேறு எத்தனையோ வாசகர்களின் மனத்தையும் கவர்ந்துள்ளது. அத்தோடு எங்கள் மனதில் எழுந்த சந்தேகங்களையும் நிவிர்த்தி செய்து தெளிவாக்கி எங்கள் மனத்தையும் சோதிடத்தில் லயிக்கச் செய்து நம்பிக்கையும் உண்டாக்கி இருக்கின்றது.

தற்போது உள்ள விலைவாசி அதிகரிப்பையும் அச்சுவேலைக்குரிய பேப்பர், மை முதலியவற்றின் விலை அதிகரிப்பையும் கவனத்திற்கு எடுத்து மலரின் விலையை நாலு ரூபாவில் இருந்து ஐந்து ரூபாவாக உயர்த்தினாலும், எங்களுக்கு மறுப்பே இல்லை. ஆனால் ஒவ்வொரு மாதமும் சந்தேக நிவிர்த்தியையும் ஆய்வுமன்றக் கேள்விபதிலையும் குறைந்ததது முறையே இவ்விரண்டு பக்கங்களாவது பிரசுரிக்கும்படி பணிவாக வேண்டுகின்றேன்.

மாவிட்டபுரம்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
சி. விக்கினராஜா.

## மணப்பந்தல்

| | | | |
|---|---|---|---|
| லக் | | கே | |
| செ | கிரகநிலை | | சந் |
| | | | |
| | சனி ராகு | சூரி புக | சுக் வி |

ஜாதகம் இல: 71

பெண்

பிறந்த திகதி: 26-10-1956

நட்சத்திரம்: பூசம்

உயர் இந்து வேளாண் இனத்தைச் சேர்ந்த A/L படித்த நற்குணம், அழகுடைய கன்னிப் பெண்ணுக்கு இதே இனத்தைச் சேர்ந்த அரச, தனியார் தொழில் பார்க்கும் வரன் தேவை. சீதனமாக வீடுவளவு, தென்னந்தோட்டம், நகை பொருத்தமானரொக்கம் என்பன கொடுக்கலாம்.

தொடர்பு:- 'மணப்பந்தல்' சோதிடமலர்
மட்டுவில் — சாவகச்சேரி.

# சிவ விரதங்கள்

(முன் தொடர்ச்சி)

'கோப்பாய் – சிவம்'

## கேதாரேஸ்வரவிரதம்

கேதாரகௌரிவிரதம் என்ற பெயரால் அழைக்கப்படும் இவ்விரதம் அம்பிகையை நோக்கி அநுஷ்டிக்கப்படும் சக்திவிரதங்களுள் ஒன்றாகும் என்ற தப்பபிப்பிராயம் இவ்விரதத்தின் பெயர்க் காரணமாகப் பலரிடையே நிலவுவதுண்டு. திருக் கேதாரநாதராகிய கேதாரேஸ்வரப்பெருமானை அத்தலத்து நாயகியாகிய கேதாரகௌரிஅம்பாள் பூஜித்து வழிபட்ட விரதமாகையால் இவ்விரதத் துக்கு இப்பெயர் வந்தது. இது உண்மையில் சிவ லிங்கப்பெருமானைக் கருதி அநுஷ்டிக்கும் ஒரு சிவ விரதமாகும்.

இன்று மிகப்பலரால் கைக்கொள்ளப்பட்டு வரும் பிரபலமான ஒரு விரதமாக இது இருப்ப தால் இந்த விரதத்தின்கதை, கைக்கொள்ளும் முறை முதலியவற்றைச் சரியான முறையில் பல ரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமா கும். இவ்விரதம் சூதபுராணிகரால் ஏனைய முனி வர்களுக்குச் சொல்லப்பட்டது.

ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையில் முடிவுறும் இருபத்தொருநாள் விரதம் இது. பெரும்பாலும் புரட்டாதி மாத வளர்பிறை நவமி அல்லது அதற்கு முதல் நாள் அல்லது அதற்கு அடுத்தநாள் ஆரம்பமாகும்.

முன்பொருசமயம் திருக்கைலாயத்திலே வசந்தமண்டபத்திலே பார்வதிசமேதராகப் பரம சிவன் வீற்றிருக்கும்போது இந்திராதி தேவர்களும் முனிசிரேஷ்டர்களும் கூடிநின்று தரிசித்தனர். நாரதர் முதலியோரின் இன்னிசையும், ஊர்வசி முதலிய தேவலோக நாட்டியப் பெண்களின் நட னமும் நடைபெற்றன.

அப்போது சிவபக்தரான பிருங்கிமுனிவரும் அங்கு வந்திருந்து ஆனந்தமயமான ஒரு விசேடக் கூத்தினை ஆடிக்காட்டினார். இதன்பின் தீவிர சிவ பக்தரான அம்முனிவர் பார்வதியை விட்டுச் சிவனை மட்டும் தனியாக வலம்வந்து வணங்கி னார்: இதைக்கண்டு வியப்புற்ற பார்வதி பரமசிவ னிடம் அதன் காரணத்தை வினவினார். அதற்கு அவர்,

''சிவத்திற்கும் சக்திக்குமுள்ள உறவு உயிருக் கும் உடலுக்கும் உள்ள உறவு போன்றது. தேகப் பற்றை நீக்கி அதிபக்குவமடைந்தவர்கள் உடலைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அக்கருத்தினால்-உயிர் விஷயத்தில் மட்டும் பற்றுள்ளவராதலால் - சக்தி பற்றிய அக்கறையின்றி உயிராகிய சிவத்தை மட் டும் வழிபடுவராயினார்" என்று விளக்கமளித்தார்

''அப்படியானால் இந்த பிருங்கிமுனிவருக்குத் தேகவலுவாகிய சக்தி எதற்கு?'' என்றெண்ணிய அம்பிகை அவரது உடல்வலிமையையும் ஊன் உதிரப் பசையையும் முற்றாகவிலக்கிவிட்டார்: அவர்வெறும் எலும்பும் தோலுமாகி, இயங்கும் ஆற்றலின்றித் தடுமாறினார். அவர்மீதிரங்கிய சிவ பிரான் அவருக்குத் தண்டொன்று கிடைக்கச் செய்தார். அதனையூன்றி ஒருவாறு இயங்கலானார் பிருங்கிமுனிவர்.

அக்கனமே அவ்விடம்விட்டகன்ற பார்வதி கௌதமமுனிவரது ஆஸ்ரமத்திற்குச் சென்று ஆங் கோர் வில்வமரத்தடியில் வீற்றிருந்தார். அம்மை யின் வரவையுணர்ந்த கௌதமமுனிவர் அங்கு வந்து தரிசனம் செய்தார். அம்பிகை அவரை நோக்கி ''யாம் பரமேஸ்வரனோடு ஒரே உருவில் சரிபாதியாய்ப் பொருந்த வேண்டும் அதற்குரிய ஒரு நோன்பினை நான் நோற்கவேண்டும்'' என்று தமது விருப்பத்தைத் தெரிவித்தார்.

முனிவர் கேதாரகௌரி விரதத்தைப் பார்வ திக்கு எடுத்துரைக்கப் பார்வதியும் முறைப்படி அவ்விரதம் கைக்கொண்டு பரமேஸ்வரனது இடப் பாகம் பெற்று மகிழ்ந்தார்.

உஜ்ஜயினி என்ற நாட்டு மன்னன் வச்ரதந் தன் என்பவன் சித்திராங்கதன் என்ற சிவபக்தன் வாயிலாக இவ்விரதமகிமையை அறிந்து, அநுஷ் டித்துப் பேறுபெற்றான். இவ்விரதத்தைக் கேள்வி யுற்ற புண்ணியவதி, பாக்கியவதி என்ற இரு சகோதரிகளும் இவ்விரதத்தை முறைப்படி கைக்

கொண்டு இரு அரசகுமாரர்களை மணந்து இனிது வாழ்ந்தனர்.

இவர்களுள் பாக்கியவதி தனது செல்வச் செருக்கினால் இவ்விரதத்தை மறந்து கைவிட்டவளானாள். இதனால், இவள் கணவனாகிய அரச குமாரன் பகையரசர்களாற் தோற்கடிக்கப்பட்டு விடவே இவர்கள் நாடுகடத்தப்பட்டனர். அங்கு ஓர் ஓலைக்குடிசையில் கஷ்டஜீவனம் நடத்தி வந்தனர். இந்நிலையில் தன் கழுத்திலிருந்த நோன்புக் கயிற்றைக் கவனமில்லாமல் அறுத்துவீச அது முற்றத்திலிருந்த அவரைக்கொடிப்பந்தரில் வீழ்ந்தது.

புண்ணியவதியோ தொடர்ந்து இந்தக் கேதாரகௌரி நோன்பைக் கைக்கொண்டு செல்வச்சுகத்துடன் வாழ்ந்து வந்தாள். பாக்கியவதி தனது கஷ்டநிலையைத் தெரிவித்துப் புண்ணியவதியிடம் ஆள்அனுப்பி உதவி கோரினாள். பாக்கியவதி நோன்பைக் கைவிட்டதனால்தான் இக்கதி நேர்ந்ததென உணர்ந்த புண்ணியவதி அவளுக்கு வேண்டிய உதவிகள் செய்ததோடு விரதத்தை மறுபடி கைக்கொள்ளுமாறு ஆலோசனையும் கூறி அதற்கான வழிவகைகளும் செய்துகொடுத்தாள்.

தன்வீட்டு முற்றத்திலிருந்த அவரைக்கொடி தான்வீசிய நோன்புக்கயிறு காரணமாக மிகவும் செழித்து வளர்ந்து அளவுகணக்கின்றிக் காய்த்து நிற்றலைக்கண்டு, நோன்புக் கயிற்றின் பெருமையை உணர்ந்த பாக்கியவதி கேதாரகௌரி விரதச்சிறப்பையும் தெரிந்து கொண்டாள். தான் செய்த தவறுக்கு மனம் வருந்திச் சகோதரியின் சொற்படி மீண்டும் விரதமிருந்து அதன் மூலம் மீண்டும் தமது இராச்சியத்தையடைந்து மகிழ்வுற்றிருந்தாள்.

வீட்டிலே இதற்கென அமைத்த தூய்மையான இடத்தில் அல்லது சுவாமி அறையில் அல்லது வில்வமரத்தடிபோன்ற பொருத்தமான இடங்களில் அல்லது ஆலயங்களில் இவ்விரத பூஜையை நடத்தலாம். மண்ணினால் சிவலிங்கம் செய்து அதில் கேதாரேஸ்வரப் பெருமானைப் பூர்வாங்க பூஜைகளுடன் முறைப்படி ஆவாஹனம் செய்து விசேஷ அபிஷேகம் பூஜைகளை நடத்துதல் முறை. கும்பம் வைத்து அதிலேயும் ஆவாஹனம் செய்து பூஜிக்கலாம்.

எள்ளுருண்டை, மஞ்சளுருண்டை, அதிரசம் (அரியதரம்), வாழைப்பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு என்பவற்றை வகைக்கு ஒன்றாகத் தினமும் நிவேதனம் செய்யவேண்டும். (21 நாளும்)

பகல்முழுவதும் பட்டினியிருந்து சாயங்காலத்தில் இந்தப்பூசையைச் செய்தபின் நிவேதனங்களை மட்டும் உண்டு பூஜைக்குப் பயன்படுத்திய தீர்த்தத்தை அருந்திவரவேண்டும்.

இருபத்தோரிழைகள் கொண்ட பட்டு நூலை ஒன்றை முறுக்கி லிங்கம் அல்லது கும்பத்தின் மீது வைத்துப் பூஜைமுடிவில் வலம்வந்து வணங்கியபின் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு முடிச்சு இடவேண்டும். இருபத்தோராம்நாள் இக்காப்புக் கயிற்றினைத் தமது முன்கையிலோ புயத்திலோ கழுத்திலோ தரித்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தவருடம் விரதநாளில் இவ்வாறு புதிய காப்புக்கயிற்றினைக் கட்டும்போது பழைய கயிறு விலக்கப்படவேண்டும். பின்னர் இக்கயிறு பூஜித்த மண்லிங்கம் என்பவற்றைப்புண்ணிய தீர்த்தத்திலே (நீர்நிலைகளில்) விட்டுவிடவேண்டும்.

இறுதிநாளாகிய இருபத்தோராம்நாள் பூரண உபவாசமிருந்து மறுநாள் அதிகாலையில் பாரணை செய்தல்முறை. இருபத்தொருநாளும் விரதமிருக்க வசதியில்லாதவர்கள் இறுதிநாளாகிய ஐப்பசி மாத அமாவாசை நாளாகிய கேதாரகௌரி விரதநாளில் இந்தவிரதமிருக்கலாம்.

இத்தினத்தில் காலையில் ஸ்நானம் செய்து சந்தியாவந்தனாதிகள் முடித்துப் பூரண உபவாசமாக இருக்கவேண்டும். மாலையில் சிவலிங்கம் அல்லது கும்பத்தில் கேதாரேஸ்வரரை ஆவாகனம் செய்து முறைப்படி பூஜை செய்யவேண்டும். அதிரசம், சர்க்கரை உருண்டை, சந்தன உருண்டை, மஞ்சல் உருண்டை, வெற்றிலை, பாக்கு என்பவற்றை ஒவ்வொன்றிலும் இருபத்தொரு எண்ணிக்கை வைத்து மற்றும் பழவகை தேங்காய் என்பவற்றையும் நிவேதனம் செய்யவேண்டும்.

இருபத்தோரிழை கொண்ட பட்டுநூல் கயிற்றைக் கையிலே கட்டுவதற்கேற்ற அளவில் எடுத்து அதில் இருபத்தொரு முடிச்சுகள் இட்டு அதனைக் கும்பத்திலே வைத்துப் பூஜை செய்தபின் உத்வாசனம் பண்ணிவிட்டு இடதுகைப் புயத்திலாவது மணிக்கட்டிலாவது கட்டவேண்டும்.

மறுநாள் காலையில் மாகேஸ்வரபூஜை நிறைவேற்றிவிட்டு எட்டரை மணிக்கு முன் பாரணை செய்ய வேண்டும். இவ்விரதம் இருபத்தொரு வருடம் கொள்ள வேண்டும். இயலாதவர்கள் ஏழுவருடமாவது கொள்ளவேண்டும்.

# எண் சோதிடமும் அதன் உண்மைகளும்

(முன் தொடர்ச்சி)

## 5. எண்களின் இரகசியம்

சிலர் 'உரு' ஆடிப்பலன் சொல்வார்கள், ஏதோ ஒரு 'சாமி'யின் கலை பக்தனில் வந்து பலன் கூறுவதாகக் கொள்வார்கள்.

வேறு சிலர் கனவில் காட்சியளித்ததாகக் கதையளப்பார்கள்.

இதேபாணியில் ஒரு இந்திய எண் சோதிடரும் விளம்பரம் செய்கிறார். "நடக்கவிருக்கும் துரதிஷ்ட சம்பவங்களை மாற்றக் கூடிய ஆற்றல் உண்டானாலன்றி ஒருவருக்கும் பலன் சொல்வதில்லை என முடிவு செய்த ஒவ்வொரு தடவையும் அன்னை அந்த சக்தியைத் தரும் கலையையும் நீ கற்பாய். பலன் கூறுவதை நிறுத்தாதே எனக் கூறி வந்தனள், பெயரை சிறிது மாற்றி அல்லது திருத்தியமைத்தும் எதிர்பார்த்த பலன் கிட்டியது" என்கிறார்.

இதனால் எதையும் இஷ்டம் போல் மாற்றியமைக்க முடியுமென்கிறாரா? புகைவண்டியில் ஏறும்போது இறங்குமிடமும் நிச்சயிக்கப்பட்டு விடுகின்றது. பிறக்கும்போது இறப்பும் தீர்மானிக்கப்பட்டுவிடுகின்றது. வானில் விட்டெறிந்த கல்தரையைத் தொட்டுத்தான் ஆகவேண்டும்.

எனவே சிலசுய நலமிகள் இவ்விஞ்ஞானத்தை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதுடன் கடவுள், மதம் ஆகியவற்றையும் பயன்படுத்திக் கொண்டதில் வியப்பில்லை.

சிலர் மௌனத்திலிருந்து எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி 'அவனி'டமிருந்து செய்திகள் (Gets Message from the Supreme Controller) பெறுகின்றார்கள். இவர்களுடைய ஜனன சாதகத்தில் உதய லக்கினம் சனி, நெப்ரீயூன் முதலிய கிரகங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கும், ஆனால் சம்பவங்களை இவர்களால் மாற்றியமைக்க முடியாது.

விதியின் வலையில் உள்ள சம்பவங்களை எண்கள் மூலம் ஓரளவு அறிந்துகொள்ளலாம். அதனால் எமது மனதை பக்குவப்படுத்தி வளைந்து கொடுத்து வாழ்க்கையில் வெற்றிகாணலாம். இதுதான் வாழ்க்கையின் வெற்றியின் இரகசியம்.

இளமையில் பெற்றோரிடத்திலும் ஆசிரியரிடத்திலும் பணிவுடன் வளைந்து கல்வி பயின்ற பிள்ளைகள் உலகில் சிறப்படைகின்றார்கள். வில்லைப் போல் வளைந்த புருவம்தான் அழகு காட்டுகின்றது. மயிர் நேராக இருந்தால் அழகியில்லை. வளைந்து வளைந்து கடல் அலைபோல் சுருண்டு இருந்தால்தான் அழகாக இருக்கிறது.

நதிகளும் வளைந்து வளைந்து தான் ஓடுகின்றன. இல்லையேல் அவைகள் தங்கள் இலக்கை அடைய முடியாது.

வாழ்க்கையும் வளைந்து வளைந்து கொடுத்து முன்னேற்றம் காண்கின்றது.

ஒரு கருத்தை நேர்முகமாகக் கூறுவதை விட வளைத்து மறைமுகமாகக் கூறுகின்ற கருத்தின் உயர்வு தனிச்சிறப்பு அடைகின்றது. இவைகள் யாவும் இயற்கை கூறும் இரகசியங்கள்.

எண்களும் பல இரகசியங்களை மூடி மறைத்து வைத்திருக்கின்றன. உதாரணத்திற்கு மூல எண் 5க்குரியவர்கள் 'நகம்' கடிப்பார்கள். அதனால் மூல எண் 5க்குரியவர்கள் எல்லோரும் நகம் கடிப்பார்களா?

எண்கள் (தாயெண்) 14, 23, 32, 41, 68, 86, 77 யாவும் மூல எண் 5ஐ கொடுக்கும். இவைகளில் தாயெண் 41 காணப்படும்போது அவர்கள் நிச்சயமாக 'நகம்' கடிப்பார்கள்.

வித்தின்றிப் புல், பூடு, செடி, கொடி, கருக்கள் விளையமாட்டா, இதேபோல் மூல எண் இல்லையேல் பல இரகசியங்கள் புலனாகா.

ஒரு வித்து!
மூல எண்ணும் வித்துத்தான்.
வித்திலிருந்து மூளை தோன்றுகிறது.

— 'பவானி' பருத்தித்துறை —

மூல எண்ணிலிருந்துதான் தாயெண் தோன்று கின்றது.

ஒரு வித்து வளர்ந்து நாற்ருக மாறுவது 'முளைத்தல்' எனப்படும்.

மூல எண்ணிலிருந்து தாயெண்ணும் மற்றும் எண்களும் தோன்றுவதுதான் 'தொகுத்தல்' எனப்படும்.

வித்துக்களில் ஒருவித்திலை, இருவித்திலை என இருவகைகள் உள.

அனேகமான வித்துக்கள் இரு சோணைகள் கொண்ட இருவித்திலைகளாகும்.

இதேபோல தாயெண்ணிலும் இரு இலக்கங்கள் உள.

வித்திலைகளின் உணவுப் பொருட்கள் முளைத்தலின்போது வித்தின் செயல்பாட்டை ஊக்குவிக்கின்றன.

இதேபோல் தாயெண்ணின் இரு இலக்கங்களின் சக்தி மூல எண்ணின் செயல்பாட்டை ஊக்குவிக்கின்றன.

உதாரணத்திற்கு எண் 41ல் உள்ள இரு இலக்கங்களின் (4,1) சக்தி அதன் மூல எண் 5ன் செயல்ப்பாட்டை ஊக்குவிப்பதால் 'நகம்' கடிபடுகின்றது.

வித்திலைகளுக்கு நடுவே ஒரு சிறு அமைப்பு முளைததண்டாக வளர்கின்றது. முளைத்தண்டு வெளிவரும் போது வித்திலைகளும் மேற்புறமாக வெளியில் வந்து வளர்ந்து, பச்சைநிறமாக மாறி இலைகளாக காட்சியளிக்கின்றன. இதையடுத்து தண்டில் மூன்று இலைகள் தோன்றுகின்றன.

மூல எண்ணும் முதன்முதலாக இரு இலக்கங்களையுடைய தாயெண்ணை தோற்றுவித்து அடுத்த வரிசையில் மூன்று இலக்கங்களையுடைய எண் தோன்றுகின்றது.

2 2 8

(4—1) தாயெண்

(5) மூல எண்

பொதுவாக ஒரு நாற்றில் குறைந்தது ஐந்து ஆறு இலைகள் காணப்படும், நல்ல நாற்றின் தண்டும் உறுதியுடன் நிமிர்ந்து நிற்கும். அக்காலை இந்நாற்றைப் பிடுங்கி தயாராக இருக்கும் நிலத்தில் நாட்டி, நீர் ஊற்றி, பசளையிட்டு, பயிராக்கி நல்ல பயனை அடைகின்றோம்.

இதேபோல் மூல எண்ணும் (5), இலக்கங்களைக் கொண்ட தாயெண்ணும் (41), மூன்று இலக்கங்களும் (மூன்றும் வரிசையில் உள்ளது. 228), முள்ளந்தண்டு எண்களும் (5,2) தான் சரியான பலனைத் தீர்மானிப்பதற்கு முக்கியமாகும். எனவே வெறும் (மூல எண் 5) எண் 5க் கொண்டு சரியான பலனைத் தீர்மானிக்க முடியாது.

மூல எண் 1ன் சிறப்பு என்ன? அதன் தாயெண் 82 ஆராயப்பட வேண்டும். அத்துடன் தாயெண் 82க்கு மேல் உள்ள எண் 538 (மூன்றும் வரிசை) ஆராயப்படல் வேண்டும்.

2—3—9—8

5—3—8

(82)

(1)

(வளரும்)

---

(18-ம் பக்கத் தொடர்)

நான் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு தன்மை அல்லது விடயங்களும் இதுவரை இருந்துவந்த/பெயரினுல்/அடைந்துள்ள நன்மை, தீமை, இலாப நட்டம் என்னென்ன? அதே பெயரைத் தொடர்ந்து வைத்திருந்தால் எதிர்காலத்தில் அந் நிலைகளில் அதாவது தொழில், குடும்பம், நண்பர், உறவினர், பிள்ளைகள் அவரின் உடல் நிலை போன்றவற்றில் என்னென்ன தாக்கங்களை அல்லது நன்மைதீமைகளைத் தரவிருக்கின்றது. நாம் பெயரை மாற்றுவதென்ருல் என்ன எண்ணில் பெயரை மாற்றக்கூடிய சாத்தியம் உண்டு. அப் புதிய எண்ணில் பெயர் வைத்தால் நான் முன்னர் கூறிய அந்த விடயங்கள் எல்லாவற்றிலும் என்னென்ன தாக்கங்களைச் செய்யும் என்ற இவ்வாருன விசயங்களை நாம் மிக்க கவனமாக ஆராய்ந்து எடை போட்டுப்பார்க்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட ஒரு நன்மையை அடைய பெயரெண்ணை மாற்றினுல் அதுவேறு விஷயங்களில் தீமையும் செய்யலாம். என்று நேயர்களுக்கு எச்சரிக்க விரும்புகின்றேன். தொழிலில் முன்னேற வென்று பெயரை மாற்றினுல் அது குடும்பத்தில் தகராறை உண்டுபண்ணலாம். வியாபார வெற்றியைக் குறித்து பெயரை மாற்றினுல் அது குழந்தைப்பலனை இல்லாமற் செய்யக்கூடும். குடும்பப் பிரச்சனைகளைத் தீர்க்க பெயரை மாற்றினுல் அது உடல் நோயை ஏற்படுத்திக்கொள்ளும். எனவே நாம் பெயரை மாற்றும் பொழுது எவ்வளவு கவனமாக இருக்கவேண்டும் என்பதை நேயர்கள் உணர்வீர்கள். இதை இன்னும் விளக்கமாக உதாரணங்களோடு அடுத்தமுறை பார்ப்போம்.

(வளரும்)

Registered as News Paper at the G. P. O. Sri Lanka.





"சுடர் விளக்காயினும்
தூண்டு கோலொன்று
வேண்டும் அல்லவா?"

நாம் நற்பணி செய்ய எங்கள் தயாரிப்புக்களை
வாங்கி ஆதரியுங்கள்.


**மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

# மில்க்வைற் தொழிலகம்

**த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233**

வாங்கிவிட்டீர்களா? விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

புதுவருட
(சுக்ல- 1989-90)




# திருக்கணித பஞ்சாங்கம்

வழமையான எல்லா அம்சங்களும் நிறைந்துள்ளது.

பஞ்சாங்க அம்சங்கள், சமயானுஷ்டானங்கள், கோள்களின் நிலைகள், அதற்குரிய பலாபலன்கள் என்பவற்றை துல்லியமான கணித முறையால் இயம்பி, மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவது,

## திருக்கணித பஞ்சாங்கம் ஒன்றே!

**விலை ரூபா 25-00 மட்டுமே.**
(தபாற் செலவு வேறு)

— சகல புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும் —

விபரங்கட்கு:-

**திருக்கணித நிலையம்**
*மட்டுவில்—சாவகச்சேரி*


**Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal Thirukkanitha Nilayam, Maduvil, Chavakachcheri; Sri Lanka. Phone: 280**